
# தேமதுரம்




2005-2006

1 தமிழ் மன்றம்

கொக்குவில் இந்துக் கல்லூரி

# தேமதுரம்

## 2005 - 2006

## இதழ் - 01

இதழாசிரியர்:

செல்வன் செ.சித்தார்த்தன்
தமிழ் மன்றம்

**கொக்குவில் இந்துக் கல்லூரி**

கொக்குவில்

யாழ்ப்பாணம்

ஆவணி - 2005


## எங்கள் அதிபர்



**திரு.பொ.கமலநாதன்**

(B.Com.Dip-in-Edu.   SLPSI)

## ஆசிச்செய்தி



பேரன்புள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், மற்றும் யாவருக்கும் எனது அன்பான வணக்கங்கள். தமிழ்த்தின விழாவிலே கலைப்பீட மாணவர்களின் அரிய முயற்சியினால் உங்கள் கைகளில் மிளிரும் "தேமதுரம்" எனும் நூல் எமது மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும், எமது கல்விச் செல்வம் மென்மேலும் பிரகாசிக்கவும் எல்லாம்வல்ல மஹாவள்ளி, கஜவள்ளி சமேத ஸ்ரீகிருபாகர சிவசுப்பிரமணியப் பெருமானின் பாதார விந்தங்களை வணங்கி அவர் அருளாலே இந்நூல் சிறப்புற அமையவும் நீங்கள் எல்லோரும் சகல செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ்க!. நல்லாசி கூறி விடைபெறுகிறேன்.

*"ஸர்வே ஜனா ஸுகினோ பவந்து*
*ஸமஸ்த சன் மங்களானி பவந்து"*
"சுபமஸ்து"


சிவஸ்ரீ க.சிவதாசக் குருக்கள்
(பிரதம சிவாச்சாரியார்,
ஸ்ரீ கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்,
கொக்குவில்)

# கல்லூரி கீதம்

தெளிதரு கலையில் பலமா ணவர்தேர்
கொக்குவில் ஹிந்துக் கல்லூரி
கொக்கூர் ஹிந்துக் கல்லூரிநீ தீபம்
கிராமத்துக் கொண்மணி மகுடம்
நினதுயர் கலைமுறை நிதம்நிதம் பெற்றோம்
நினதருள் யாமினி மறவோம்
நீயே விந்தை யினுறையுள், நினதே எங்களினுயர்வு
நினதடி யேத்து வோமே.

பல்லவி

நினதருள் மிகுமொழி நமதே பொருளாம்: நீதரு ஞானம தீதம்
ஜெயஹோ! ஜெயஹோ! ஜெயஹோ ஜெய, ஜெய, ஜெய ஜெயஹோ!
நீதரு ஞானம தீதம்
அறிவுச் சுடர் கொண்ட நம்பொரு ளின்பம்
தழுவும் வாழ்வினைத் தந்தாய்
கற்றன ஒழுகும் சீருறு வழிநீ
காட்டினை, நீடுக எனவே
அற்புத நடமா டமலன அடிமன னொடுவழி படுவோம்.
வழிமுறை மிளிர்க நின் நாமம்

(ஞானம தீதம்)

பல்லவி

நினதருள் உள்ளத் துறுதி தருவா யுன்றன்
பாரம் பரியம் பேண
பூமியில் நீபெறு நல்லிசை மேலாம்
பெருமிதம் மாணவர்க் கென்றும்
முயல்குவம் நீயுயர் வழிகள் முழுமன்னொடு மகிழ் வாக
நினதருள் உள்ளத் துறுதி தருவா யுன்றன்

(ஞானமதீதம்)

# அதிபரின் ஆசிச்செய்தி

எமது கல்லூரியின் தமிழ் மன்றம் தனது வருடாந்தச் செயற்பாடுகளின் கன்னி முயற்சியாக 'தேமதுரம்' என்னும் சஞ்சிகையை இன்று வெளியிடுவது பெருமைக்குரிய விடயமாகும். இச்சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நானும் மகிழ்வடைகிறேன்.

மாணவ, மாணவியரின் எழுத்தாற்றலை வளர்த்துவிடும்வகையில் வெளிவரும் இச்சஞ்சிகை அவர்களினால் எழுதப்பட்ட கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள், மற்றும் பொதுஅறிவு சார்ந்த விடயங்கள் என்வற்றைக் கொண்டதாக அமைந்துள்ளதுடன், இதன் பயன்பாட்டினை வலுப்படுத்தும் வகையில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களினால் எழுதப்பட்ட 'செம்மையின் திருவடித்தலம்' என்ற கட்டுரையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இச்சஞ்சிகை வெளிவருவதற்கு உதவிய மன்றப் பொறுப்பாசிரியர்கள், மாணவ மாணவியர்கள்,விளம்பரதாரர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன், தொடரும் காலத்திலும் இச்சஞ்சிகை சிறந்ததாக வெளிவர இறைவனின் அருள்வேண்டி ஆசிகூறுகிறேன்.

பொ.கமலநாதன்

(அதிபர்)

# பொறுப்பாசிரியையின் வாழ்த்துச் செய்தி

உலகிலுள்ள மொழிகளுள் நெடிய பாரம்பரியத்தையும், தனித்துவத்தையும் கொண்டு உயிர்த்துடிப்புடன் வாழ்ந்து வருகின்ற மொழி எம் தமிழ் மொழியே. ஆண்டு தோறும் தமிழ்மொழித் தினத்தின் போது போட்டிகளில் பங்குபற்றி பாடசாலை, கோட்டம், மாவட்டம், மாகாணம் என எமது கல்லூரி மாணவர்கள், அரிய, சாதனைகளை சாதித்து வருகின்றனர்.

எமது கல்லூரியின் தமிழ்த்தின விழாவோடு தொடர்பாக, எமது மன்றத்தினால் வெளியிடப்பட்டுள்ள இம்மலர் மாணவர் தம் ஆக்கங்களையும், எம் மொழி மேம்பாடுஅடைய வழிசமைக்கும், கல்வி வல்லுநர்களின் ஆக்கங்களையும் தாங்கி வெளிவந்துள்ளது. எனவே இம்மலர் சிறப்புற ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

*"தேமதுரம்" வெளியீடு சிறப்பு வாழ்த்துக்கள்*

*வாழ்க தமிழ்! வளர்க அதன் கலைகள்.*

திருமதி ரதி சந்திரநாதன்

(பொறுப்பாசிரியர்)

## தலைவரின் பேனா முனையிலிருந்து...

சஞ்சலங்கள் பல கடந்து சாதனைகள் படைக்கவென்று கம்பனவன் வழிநின்று தேமதுரம் தந்துள்ளோம். கலை தந்த கவிதைகளும் தமிழ் தந்த கட்டுரைகளும் மாணவர்கள் ஆக்கமதில் மகிழ்வுடனே தந்துள்ளோம்.

இந்த “தேமதுரம்” என்ற சஞ்சிகையை கொக்குவில் இந்துக் கல்லூரி தமிழ் மன்றத்தினராகிய நாங்கள் வெளியிடுவதில் மனம் மகிழ்கிறோம். இந்தச் சஞ்சிகையை வெளியிடவேண்டும் என்று என்னுடன் இணைந்து செயற்பட்ட இதழ் ஆசிரியருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். அதேபோன்று சஞ்சிகை முழுமைபெற உதவிய செயற்குழு உறுப்பினர்கள் பொறுப்பாசிரியர்கள் எமது கல்லூரிக் காப்பாளர் மற்றும் நிதிஉதவி தந்து உதவிய, மாணவர்கள் விளம்பர அனுசரணை தந்த வர்த்தகர்கள் அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

இந்தச் சஞ்சிகை எம்மால் 2005 – 2006 ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்படுகிறது. இதேபோல் எமது தமிழ் மன்றம் இனிவரும் ஆண்டுகளிலும் தனது வெளிப்பாட்டை தந்து தனது வெற்றிப் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கும் என உறுதிபடக் கூறுகின்றேன்.

உ.கபிலன்
(தலைவர்)

## *செயலாளரின் சொல்வளத்தில்...*

பொதிகைத் தென்றலிற் பிறந்து மூவேந்தர் மடியிலே தவழ்ந்து வந்த முத்தமிழ் கலை, கலாசார விழுமியங்களைப் பேணிக் காக்கும் ஒரு பணியில் பங்கெடுத்துள்ள எமது கல்லூரி தமிழ் மன்றச் செயலாளராகச் செயற்படுவதில் பெருமிதம் அடைகின்றேன். மாணவரிடையே மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர, இம்மலர் வழி சமைக்கும் என்பதால் எள்ளளவும் ஐயமே இல்லை.

எமது மன்றத்தில் 2005 – 2006 இற்குரிய முதலாவது மலராக வெளிவரும் இம் மலருக்கு அயராது உழைத்த அனைத்துள்ளங்களுக்கும் எமது இதய பூர்வமாக நன்றிகளை அர்ப்பணிக்கின்றோம். எமது கன்னி முயற்சியிலான இம் மலரை வெளியீடு செய்வதில் இன்று நாம் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.

செ.சஞ்சீவ்

(செயலாளர்)

## இதழாசிரியரின் இதயத்திலிருந்து...

"தேமதுரம்" மலர் இன்று தனது முதலாவது இதழை விரிக்கின்றது. எல்லா இடமும் மணம் பரப்புகின்றது.

புதிய நூலொன்றின் வரவு ஒரு பிரசவம். அதன் இறுதி நேரக் கஷ்டங்களை நானும் அனுபவிக்கிறேன். சுகப்பிரசவம் ஆக வேண்டுமென்ற கவலை என்னிடம்!

என்னோடு ஒத்தவர்களின் அயரா உழைப்பும் சேர்ந்திருக்க எம் கனவுகள் நிஜமாகி உங்கள் கைகளில் தவழ்ந்திடும் தேமதுரம்!

எமது கல்லூரி மாணவர்களது ஆக்கங்கள், மலருக்கு மெருகூட்டி நிற்கும் என்பது எனது நம்பிக்கை.

*குறைகள் இருப்பின் பொறுத்திடுக.*

*அதை நீக்க துணை புரிந்திடுக.*

செ.சித்தார்த்தன்

(இதழாசிரியர்)

# கொக்குவில் இந்துக் கல்லூரி


## *தமிழ் மன்றம்*

## 2005 - 2006

| | | |
|---|---|---|
| காப்பாளர் | - | திரு.பொ.கமலநாதன் |
| பொறுப்பாசிரியர் | - | திருமதி ரதி.சந்திரநாதன் |
| | | திருமதி கலாநிதி சுந்தரேசன். |
| தலைவர் | - | செல்வன் உ.கபிலன் |
| உப தலைவர் | - | செல்வி இ.மீராகினி |
| செயலாளர் | - | செல்வன் தெ.சஞ்சீவ் |
| உபசெயலாளர் | - | செலவி சு.லாவண்யா. |
| பொருளாளர் | - | செல்வன் க.ஹரிகரன் |
| இதழாசிரியர் | - | செல்வன் செ.சித்தார்த்தன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | - | செல்வி கு.கல்யாணி |
| | | செல்வி ச.சண்முகாசினி |
| | | செல்வன் த.கோகுலராம் |
| | | செல்வி ம.கஜலக்சுமி |

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தமிழ் அன்னை | 02 |
| 2. | தமிழ் எந்தன் உயிருக்கு நேர் | 02 |
| 3. | அன்புடன் உங்களுக்கு | 12 |
| 4. | தமிழ் என் காதலி | 12 |
| 5. | தெய்வ வாக்குகள் | 12 |
| 6. | இலக்கியமும் சமயமும் | 12 |
| 7. | வெற்றிக்கு இல்லை எல்லை | 12 |
| 8. | பெண்களின் கொடிய எதிரி சீதனம் | 12 |
| 9. | நட்பின் துளிகள் | 12 |
| 10. | அம்மா | |
| 11. | கலை | |
| 12. | உங்கள் பொது அறிவு எப்படி | |
| 13. | உங்களுக்குத் தெரியுமா | |
| 14. | உண்மையான கல்வி | |
| 15. | சுனாமியை ஐக்கியத்தின் ஆணையாகக் கொள்வோம் | |
| 16. | தமிழ் | |
| 17. | ஏற்றம் பெறும் தமிழ்மொழி | |
| 18. | தன்னுணர்வை அடைவதற்கான தடைக்கற்கள் | |
| 19. | நிஜமான நினைவலைகள் | |
| 20. | இருள் நிறைந்த உள்ளம் பிரகாசமானது | |
| 21. | கரை தேடும் ஓடம் | |
| 22. | செம்மையின் திருவடித்தலம் | |



தமிழ் மன்றம்

இருப்பவர்கள்: (இடமிருந்துவலம்)

திருமதி ரதி சந்திரநாதன் (பொறுப்பாசிரியர்), திருமதி பு.மகேஸ்வரன் (பிரதி அதிபர்), செல்வன் உ.கபிலன் (தலைவர்), திரு.பொ.கமலநாதன் (காப்பாளர்), செல்வன் தெ.சஞ்சீவ் (செயலாளர்), திரு.சு.வே.மகேந்திரன் (உபஅதிபர்), திரு.மோகனதாஸ் (பிரதி அதிபர்).

நிற்பவர்கள் (இடமிருந்து வலம்)

செல்வி சு.லாவண்யா (உபசெயலாளர்), செல்வி கு.கல்யாணி (பிரதிநிதி), செல்வன் செ.சித்தார்த்தன் (இதழாசிரியர்), செல்வன் க.ஹரிஹரன் (பொருளாளர்), செல்வி இ.மீறாகினி (உபதலைவர்), செல்வி ப.கஜலக்சுமி (பிரதிநிதி).

# தமிழ்

சங்கத் தமிழ் புலவன் சாதனைகள் படைக்க
சொந்தக் கவியாளன் மேமதுரம் உரைக்க
அவை தந்த கவிஞர்கள் ஆனந்தக் கவிபாட
தொகை நின்ற எம் மொழியே
தமிழ் என்று பாடிடுவோம்.

கனியதனின் சுவையதுவை கவியதனில் கூறிவிட
காவியர்கள் தம்மிடையே கனை மொழிகள் - பேசிவிட
ஒலியதனின் அலையினையே சொல் வடிவமாக்கிவிட
ஏடு தந்த எம் மொழியே
தமிழ் என்று பாடிடுவோம்.

வேற்றூரான் மொழியதனை ஒரு கனம் சாய்த்து வைக்க
எம்மவரான் அன்று தந்த முதுமொழிகள் - நிமிர்ந்து நிற்க
கல்தோன்றாக் காலமதில் முன்தோன்றி முதுமை கண்ட
முது மொழியாம் தமிழ் என்று
முரசு கொட்டிப் பாடிடுவோம்.

வள்ளல் கவி வள்ளுவனின் குறளதுவை உலகறிய
மூதாட்டி ஔவை தந்த அற நெறிகள் - அறிவளிக்க
பாலகர்கள் நாவினிலே பாரதி கவி படைக்க மூலமது தமிழ் மொழியே
என்று கூறிப் பாடிடுவோம்.

தமிழன் என்று தலை நிமிர்ந்து
தரணியிலே வாழ்வதற்கு வழிவகுத்த
எம் உயிரே தமிழ் என்று பாடிடுவோம்.

கல்யாணி – கு
கலைப்பிரிவு 13 $L_1$

# தமிழ் எந்தன் உயிருக்கு நேர்

"கல்தோன்றி மண்தோன்றா காலத்திலே
முன்தோன்றிய மூத்த தமிழ்"

யாமறிந்த மொழிகளிலே இன்றியமையாததும், கனிவானதும், சிறப்பானதுமான மொழிகளே தமிழ் மொழியினை எம் மொழிகளினாலும் வெல்ல முடியாது என்பதை நாம் எல்லோராலும் அறிந்ததே. தமிழ் நாட்டில் முச்சங்கம் அமைத்து முத்தமிழ் வளர்ந்து வந்த சங்ககால வீர மறவர்கள் தொடக்கம் இன்றுவரை வாழ்கின்ற எம் மொழி போற்றக் கூடிய ஒன்றாகும். முதுமையடைந்தது என்றாலும் நம் தமிழ் இன்றுவரை கன்னிப் பெண்ணாக உலாவுவதனைக் காணமுடிகின்றது.

'தமிழுக்கு அமுதென்று பெயர் இன்பத் தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்'

என்பது பாரதிதாசனின் பாரதக் கூற்றாகும். தமிழ் உலகத்திற்கே அளப்பரிய சேவையினைச் செய்துள்ளது. தமிழ் மொழியானது மக்களின் உதட்டில் இருந்து வந்தது அல்ல மக்களின் உள்ளத்திலிருந்து எழுந்த பாரத மொழியாகும். இந்தமிழினை எல்லோரும் பேச்சு மொழி என்றே நினைக்கின்றார்கள். ஆனால் இது ஒரு தேவையை நிறைவு செய்யும் மொழி என பாரதிதாசன் நினைத்திருந்தால் தமிழுக்கு உயிர் என்று நிச்சயமாகக் கூறியிருக்கமாட்டார். பாடும் பொருளும் பொருட்சுவையும் எடுத்து இயம்புவதே இந்தத் தமிழ் ஆகும். சங்க காலத்திலே வீரத்தையும் காதலையும் பாடும் மொழியாகவும், சங்கமருவிய காலத்தில் அறத்தைப் பாடும் மொழியாகவும், பல்லவர் காலத்தில் பத்தியைப் பாடும் மொழியாகவும், சோழர் காலத்தில் இவை எல்லாவற்றையும் ஒன்றுசேரப் பாடிய மொழியாகவும், சோழர் காலத்தில் இவை எல்லாவற்றையும் ஒன்றுசேரப் பாடிய மொழியாகவும், நாயகர் காலத்தில் வாழ்க்கைத் துன்பத்தைப் பாடும் மொழியாகவும் இருந்து வந்துள்ளமையினால் தமிழ்மொழியானது இன்றைய காலகட்டத்தில் பெரிதும் முக்கியதுவம் வாய்ந்தனவாகக் காணப்படுகின்றது.

ஒரு மனிதனை மனிதனாக வாழ வைப்பது தமிழ்மொழி என்பதை இறந்த பின்னும் கூறவேண்டும் என்பதை

'ஓடையிலே என் சாம்பல் ஓடும்போது
ஒண் தமிழே சலசலத்து ஓட வேண்டும்'

என்பது தமிழ் மொழிக்கும் சமயமொழிக்கும் உறுதுணையாகப் பிணன்னிப் பிணைந்தது தொடர்புள்ளது. அதாவது தமிழும் சமயமும் ஆனது ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றன. இவ்விரண்டிற்கும் அளப்பரிய பங்கினை ஆற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர். இதனை சி.வை. தாமோதரம்பிள்ளை இதனைக் கூறும்போது மிக அழகாக தமிழ் மொழியில் வார்த்துள்ளார்.

அதாவது

'நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திரேல்
சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே எல்லவரும்'

எனக்கூறிச்செல்கிறார். தமிழ் இல்லையேல் உயிர் நின்று என்னத்திற்கு அதாவது, உயிர்தான் தமிழ் என்பது இவர்களையே சாரும். அதாவது,

திருவள்ளுவர். இவர் காதல், வீரம், வாழ்க்கை, ஒழுக்கம், அன்பு, பொறாமை எனப் பல சொற்களினூடாக, வார்த்துள்ளார்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்பதனூடாக, அகர ஒலியே எல்லா எழுத்துக்களின் முதல் அது போலவே ஆதி பகவன் முதல் இவ்வுலகத்திற்கு எனக் கூறுவதோடு மட்டுமல்லாமல், வாழ்க்கை தத்துவத்தினையும் எடுத்துக்காட்டியவர். இதுபோல் கம்பர், வில்லிபுத்தாழ்வார், பாரதியார், வீரமா முனிவர், கண்ணதாசன், பாரதிதாசன் போன்ற எத்தனையோ பெரியார்கள் தமிழ் மொழியை கனிமொழியாகக் கொண்டு அதனை வளர்த்தெடுத்துள்ளனர். தமிழ் மொழிக்கு ஒரு பக்கம் அச்சாணியாகத் திகழ்ந்தவர் மகாகவி பாரதியார். தமிழகத்தில் இன்பத்திற்கு துன்பத்திற்கு சமபங்கு கொடுத்த புகழ்பூத்த கவிதையினை எழுதி தமிழிற்கு உயிர் கொடுத்து பெண்களினை முக்கியத்துவம் படுத்தி ஒருவரால் செய்ய முடியும் என்பதனை நிலைபெறச் செய்தவர் பாரதியார்.

'அமிழ்தம் அமிழ்தம் என்று கூறுவோம் - நித்தம்
அனலைப் பணிந்து மலர் தாவுவோம்
தமிழில் பழமறையைப் பாடுவோம் - என்றும்
தலைமை பெருமை புகழ் கூறுவோம்'

என்பதும் பாரதியார் கவி.

எத்தமிழ் மொழியிலும் பலவுற வாழ்ந்து காணப்பட்ட இயல் கதவு. அதாவது எவ்வளவு விஞ்ஞானம் உயர்ந்து சென்றாலும் அழகென்றும் சொல் தமிழ் இதையாரும் எவராலும் மறக்கமுடியாது இது இதயத்தின் முழுப் பகுதியிலும், குருதியிலும் கலந்து காணப்படுகிறது. வள்ளுவரது திருக்குறளிலே கபிலர் இதனை வியந்து திறமையாக உருகிக்காட்டியுள்ளார்.

'தினையளவு போதாச் சிறுபுல் நிர் நிண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனை அழகு
வள்ளைக்கு உறங்கும் வளநாட! வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவிரி

(கபிலர்)

ஈழத்திலும் சரி தமிழகத்திலும் சரி தமிழினைப் பாடாதவரோ மொழி பெயர்க்காதவரோ எவருமே இல்லை. சகல மொழி இருந்தாலும் தமிழ் மொழி போல் எதுவுமில்லை. இளம் மக்கள் போற்றக் கூடிய தமிழ் மொழியானது இன்று மெல்ல மெல்ல தன் சக்தியினை இழந்து வருகிறது. தமிழ் இனி மெல்ல சாகும் என எல்லோரும் கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவே உள்ளது.

'உடல் மண்ணுக்கு உயிர் தமிழுக்கு'

எனக் கூறுபவர் இனி எங்கே? எங்கே?

'பொங்கு தமிழுக்கு இன்னல் விளைத்தல்
சங்காரம் நிஜமென்று சங்கே முழங்கு'

என்பதனூடாக, தமிழ் மொழியானது ஓங்கி வளரவேண்டும். இன்னும் ஆண்டு ஆண்டு உயர வேண்டும். கவிப்பேரரசுக்குள் வளரவேண்டும். வேற்று மொழி தெரிந்திருந்தாலும் நமது தமிழ் மொழியினை மறத்தல் எந்த விதமான நியாயப்பாடு. எல்லவரும் தமிழ் மொழியினை அறிந்திருந்து அதன் புகழ் வானத்தின் எல்லை வரை எட்டவேண்டும். சூரியன் போல எப்பொழுதும் பிரகாசமானதாக காணப்படல் வேண்டும்.

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு!
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்
இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே!

தர்ஷிகா – கே

13

# தமிழ் என் காதலி

நான் பிறந்ததே உனக்காக என்று
நாணமின்றி நான் கூறிய நாடகளோ எண்ணற்றவை
நலிவு பெறாமல் நான்கு திசைகளிலும் சென்றும் நின்று
கனவை நனவாக்கிய அன்பு காதலியே தமிழே!

மானிடர்க்கு அன்னநடை அழகு நடை என வர்ணிக்க
மாமகளாம் நீ செய்யுள் நடையும் உரைநடையும்
மாமல்லரும் மருண்டு போதும் பைந்தமிழாம் அழகு கொண்டு
மண்ணில் வாழும் எம்மை மயக்கியவளே!

பெண்கள் எல்லோரும் பொன், வெள்ளி என ஆபரணம்போட
பேரின தலைவியாம் நீ ஐம் பெரும் காப்பியமாம்
சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி, மணிமேகலை, சிலப்பதிகாரம்
சிதறாமல் உலகை நெகிழ வைத்த நங்கையே!

உன் இனிமையை உலகிற்கு வெளிப்படுத்த
உலக பொது மறைகளையும் எட்டு திக்கு செய்திகளையும்
உலகத்தவர் அனைவரும் சுவைக்கும் வண்ணம்
உணவாக சமைத்த தாயினும் மேலானவள் அம்மா.

கல்தோன்றி மண் தோன்றா காலம் தொடங்கி
கலகல வென சிந்து ஆனந்தம் தரும்
கலை மகளே என் தமிழ் மொழியே
காலம் பல சென்றாலும் நீதான் என் காதலி.

ஸ்ரீகஜலக்ஷ்மி பத்மநாதன்
13 $L_2$ (2007)

# தெய்வ வாக்குகள்

1. சிறந்த தர்மம் சுய நலமற்ற சேவை.
2. சிந்தனையைவிட உணர்ச்சி ஆழமானது.
3. பொறுமையே நீடித்த பிரார்த்தனையாகிறது.
4. மெய் யறிவு பெற்றவன் கடலைப் போன்றவன்.
5. ஆடம்பரச் செலவு ஆளை அடிமையாக்கும்.
6. பண்பில்லா வாழ்வு பதருக்கு நேராகும்.
7. ஒரு மனத்துடன் ஒழுங்காகச் செல்வதே செயல்.
8. தன்னை மதிப்பவன் பிறரை மதிப்பான்.
9. சினம் போல பகைவர் இவ்வுலகில் இல்லை.
10. காரியத்தில் உறுதியாக இருப்பதுதான் வெற்றியின் இரகசியம்.
11. அறத்துக்கு அழகு தருவது அனுட்டானம்.
12. ஒழுக்கம் தவிர்த்ததும் அன்பு நஞ்சாக மாறிவிடும்.

ஜெனனி – செ
12 $E_1$ (2007)

# இலக்கியமும் சமயமும்

இலக்கியம் என்பது சமுதாயத்தைப் பிரதிபலித்துக்காட்டும் கண்ணாடி என குறிப்பிடப் படுகிறது. சமயம் என்பது மனிதனை ஒழுங்காக வாழ வழிகாட்டுகிறது. இலக்கியமும், சமயமும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து காணப்படு கிறது. காலத்துக்குக் காலம் எழுந்த இலக்கியங் கள் யாவும் சமய உண்மைகளைக் கூறும் இலக் கியங்களாகவே காணப்படுகின்றன.

சமுதாயத்தின் பண்புகளையும் சமய விழுமியங்களையும் இலக்கியங்கள் தெளிவாகப் புலப்படுத்துகின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றை எடுத்துக்கொண்டால் இந்த உண்மையை விளங் கிக்கொள்ளலாம். உலகியல் வாழ்வில் சமயம் இன்றியமையாத தொன்றாகையால் சமயம் கூறும் நற்சிந்தனைகளே இலக்கியப் பரப்பிலும் இடம் பெறுகின்றன. உலகியலில் பின்பற்றும் சிறப்பம் சமான பக்தி போன்றன இலக்கியப் பொருளாக அமைகின்றன.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககால இலக்கியங்களை எடுத்துக்கொண்டால் இயற் கையை இறைவனாகக் கொண்டு வழிபட்டதாக செய்திகள் கூறுகின்றன. முருகன், கொற்றவை, இந்திரன், வருணன், அக்கினி போன்ற கடவுளரை வழிபட்டதாக இலக்கிய ஆதாரங்கள் கூறுகின் றன. தமிழ் நாட்டுக்கு ஆரியரின் வருகையின்பின் பண்பாட்டுக்கலப்பு அவர்களது சமயாசாரச்சடங்கு கள், சமண, பௌத்த சமயங்கள் சார்ந்த இலக் கியங்கள் பல செல்வாக்குச் செலுத்தின. அறக் கருத்துக்கள் கொண்ட இலக்கியங்கள் பெருமள வில் தோற்றம் பெற்றன. சமயம் போட்டியும் அதன் வெளிப்படையாக வாதப்பிரதிவாதங் களும் களப்பிரர் கால இலக்கியங்களில் காணப் படுகின்றது.

பல்லவர் கால இலக்கியங்களும் முற்றும் முழுதாக பக்தி இலக்கியங்களாக வளர்ச்சிய டைந்தன. சமயப்போட்டியின் காரணமாக ஒவ் வொரு மதமும் தத்தம் கருத்துக்களைப் பிரச்சாரப் படுத்திக்கொள்ள ஏற்பட்ட நிலையும் சமய இலக்கி யங்களைத் தோற்றுவித்தன. இதனால் இக்காலத் தில் பக்தி இலக்கியங்கள் சிறப்பிடம் பெற்றன. பதிக வடிவில் தெய்வீகக் காதல் சார்ந்த சமய இலக்கியங்கள் பரவத் தொடங்கியன புராண இதிகாச கதைகள் மூலம் இலக்கியங்கள் தோன்றி சமய நம்பிக்கைகளை மக்கள் மத்தியல் சுடர்விட்டு பிரகாசிக்கச் செய்தன. வடமொழிச் செல்வாக்கால் வேதம், ஆகமம், சார்ந்த சமய வரலாற்று இலக்கி யங்கள் மக்களால் பெரிதும் பின்பற்றப்பட்டன. புகழ்வாய்ந்த நாயன்மார்களும் ஆழ்வார்களும் தமது ஞான அறிவால் பாடிய தேவாரங்களும் திருவாசகங்களும் சமயத்தைப் பரப்பின. வைண வப் பாசுரங்களும் பன்னிரு திருமுறைகளாகவும் பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களாகவும் பிரபந்தங் களாகவும் விளங்கி இன்றுவரை மக்கள் மத்தியில் பக்தியையும் சமய உணர்வையும் ஊட்டி வளர்க்கின்ற இலக்கியங்களாக விளங்கு கின்றன.

இவைமட்டுமல்ல சிலப்பதிகாரம் என்ற காப்பியம் சிறந்த கண்ணகி வழிபாட்டைக்கொண்ட சமய இலக்கியமாக இன்று நிலவுகிறது. இதே போன்று சமண காவியமான சீவகசிந்தாமணி, பௌத்தமத காவியமான மணிமேகலை, குண்டல கேசி, வளையாபதி என்ற ஐம்பெருங்காப்பி யங்கள் சமய இலக்கியங்களாக விளங்குகின்றன. பெரியபுராணம், கந்தபுராணம், சித்தாந்த நூல்கள், சிற்றிலக்கியங்கள், புராணங்கள், கீர்த்தனைகள், நாடகங்கள் போன்ற இலக்கியங்கள் சமய நோக் காக உடையனவாக விளங்குகின்றன.

பயந்த மனநிலை, அவலங்கள் நிறைந்த தன்மை, முடிவற்ற சோகம், மனச்சஞ்சலம் சமுதாயத்தில் காணப்பட்டபோது சமய தத்துவம் கொண்ட வித்துவக் கவிகள், நகைச்சுவை இலக்கியங்களை இயற்றி அளித்தனர். பகவத்கீதை, உபநிடதம், பிரம்மசூத்திரம் என்ற இலக்கியங்கள் முற்றும் முழுதாக சமயம் போதிக்கும் இலக்கியங்களாக தோற்றம் பெற்றன.

கதைகள் மூலம் சமயக் கருத்துக்களை தெளிவாகக் கிரகிக்கவும், பரப்பவும் வாய்ப்பாக சமய இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. ஓவியம், சிற்பம், சித்திரம், நாட்டியம், இசை போன்ற அழகியற்கலை இலக்கியங்களும் சமய இலக்கியங்களாக வளர்ச்சிபெற்றன.

இன்று கூடிய செல்வாக்கும் தாக்கமும் உடைய சமய இலக்கியங்கள் அவசியமான தொன்றாகக் கருதப்படுகிறது. இலக்கியம் வேறு சமயம் வேறு என எண்ண முடியாதவாறு இலக்கியங்கள் தான் சமயத்தின் மூலாதாரம் என நம்ப முடிகின்றது. சமயக் கருத்துக்களையும் பரப்பும் நோக்கிலேயே இலக்கியங்கள் பெரும்பாலானவை விளங்குகின்றன. இலக்கியப் பாத்திரங்கள் யாவும் உயர்ந்தனவாக சமயத்தை மேலோங்க வைக்கும் நாயகர்களாக சித்திரித்து பாடப்பட்டுள்ளனர். இலக்கிய கதாநாயகர்களுக்கு கோவில் கட்டி எழுப்பப்பட்டு அவர்களின் சிறந்த ஒழுக்கங்களை மக்கள் பின்பற்றி வாழ வழிவகுக்கப்பட்டவை இலக்கியங்களே என்றால் மிகையாகாது. மனிதனையும் அவனது வாழ்வையும் புரிந்துகொள்ளவும் வளம்படுத்தவும் மனித ஜாதியின் தன்மையையும், பிறப்பின் அர்த்தத்தையும் புரிய வைப்பனவாக சமயமும் இலக்கியமும் பிரிக்க முடியாதனவாக இணைந்துள்ளன.

இலக்கியம் தோன்றிய காலந்தொட்டே சமயமும் தோன்றியது. சமயத்தோற்றம் பெற்றபோதே இலக்கியம் தோன்றியது என்ற வாதப் பிரதிவாதங்கள் எழும் அளவுக்கு இலக்கியமும் சமயமும் ஒன்றிணைந்துவிட்டன. இலக்கியங்கள் சமயத்தைப் பரப்பும் நோக்கமாக எழுந்தன என எண்ணும் அளவுக்கு இலக்கியங்கள் ஏராளமாக தோற்றம் பெற்றுள்ளன. காவியங்கள், பிரபந்தங்கள், நாவல்கள், சிறுகதைகள், புதுக்கவிதைகள், கவிதைகள் என்ற பல்வேறு இலக்கிய வடிவங்கள் தோன்றி சமயக் கருத்துக்களை மிக இலகுவாக மக்கள் மத்தியில் வேரூன்றச் செய்துள்ளன.

தொகுத்து நோக்குமிடத்து சிறந்த ஓர் இலக்கியம் சிறந்த ஒரு மதத்தை பரப்புவதற்கு கருவியாக விளங்கியுள்ளது. சமய உட்பொருளை வெளிப்படுத்தத்தக்க ஆற்றல் இலக்கியங்களுக்கே உண்டு. பாமர மக்கள் இறை நம்பிக்கையுடன் சமயத்தைப் பின்பற்றி ஈடேற வைத்தது இலக்கியம் என்பது தெளிவாகின்றது.

ஆக்கம்:
ஜாழ்னி சிவனேசன்
கலைப்பிரிவு 13 L II

தன்னுணர்வை அடைவதற்கான தடைகற்களாவன....

மிதமிஞ்சிய தூக்கம்
மன ஈடாட்டம்
தாழ்வு மனப்பான்மை
மனக்கோட்டை கட்டுதல்
பேராசை
நோய்
மண், பெண், பொன ஆசை.
மீதூண் விரும்பல்
காமம்
குரோதம் போன்றவையாகும்.

# பெண்களின் கொடிய எதிரி சீதனம்

நாளாந்தம் உழைப்பதன் மூலம் காலத்தை நகர்த்தும் குடும்பம்தான் கமலம் குடும்பம். கணவன் இறந்து பல வருடங்கள் சென்றபோதும் தனது மன உறுதியாலும், நம்பிக்கையாலும் மூன்று பெண் பிள்ளைகளையும் வளர்க்கின்றாள். மூத்தபிள்ளை கவிதா படித்து முடித்து சிறு தொழில் ஸ்தாபனத்தில் வேலை செய்கின்றாள். அடுத்த மகள் லலிதா பாடசாலை கல்வி முடிந்து வேலைக்காக எதிர்பார்த்த வண்ணம் இருக்கின்றாள். கடைசிப்பிள்ளை ஜீவிதா க.பொ.த (உ/த) படிக்கின்றாள் இறுதி சரண்டிலி.

எவ்வாறு ஆகினும் மூத்த பெண்ணிற்கு திருமணம் செய்து அவரை கரையேற்ற வேண்டும் என்பது கமலத்தின் எண்ணம். காலத்தின் கட்டளையால் திடீரென கமலத்தின் கணவர் இறந்துவிட்டார். பிள்ளை கவிதா தொழில் ஒண்டு செய்யிறாள் தானே கொஞ்ச சீதனத்தோட நல்ல வரனாய் பார்த்து நல்ல சாதிக்குள்ள சொல்லுங்கோவன் என கலியாண புறோகர் தம்பையாவிடம் கோயிலில் கண்டு சொன்னாள் கமலம். சரி ஓரளவு திறமான வேலை செய்யிற பொடியனா பாத்து சொல்லுறன் என்று கூறியவாறு புறோக்கர் சென்றார். நாட்கள் சென்றன ஒருநாள் கம லம் எப்பிடி இருக்கிறா பிள்ளைக்கு ஒரு நல்ல வரன் கிடைச்சிரிக்கு நல்ல பொருத்தம் இந்தா பார் மாப்பிள்ளையின்ர படம். கவிதான்ர படத்தை தாறியே காட்ட. அப்பிடி எண்டால் 15ஆம் திகதி நல்ல நாள் பெண் பார்க்க வர சொல்லட்டே என தம்பையா கதையை அடுக்கி கொண்டே போனான். சரி சந்தோசம் வர சொல்லுங்கோ என்றாள் கமலம்.

அம்மா நான் கொம்பியூட்டர் Class போக போறன் வீட்டில இருந்துதான் என்ன செய்யிறது. ஒரு கோஸ் படிக்க 2500/= வேணும் தாறியே என அன்பாக கெஞ்சினாள் லலிதா. அன்றாட அத்தியாவசிய தேவை நிறைவேற்றவே கஸ்ரபடும் கமலம் தான் என்ன செய்வது. ஏதோ படிச்சு வீட்டைக் காப்பாத்தினா சரி. அக்கா வரட்டும் இண்டைக்கு சம்பளம் என்றவள் வீட்டிற்கு சாமான் வாங்கினது போக மிச்சமிருந்தா தருவாள் என லலிதாவின் மனதை தேற்றினாள் கமலம்.

கடைசிப் பெண் ஜீவிதா மூத்த சகோதரிகளைவிட வித்தியாசமானவள். நவநாகரிகமாக வாழ விரும்புபவள் கடைசிப்பிள்ளை என்பதால் எல்லோர்க்கும் செல்லமாக இருந்தாள். கமலமும் அவள் ஆசைப்படுவதை இயன்றவரை நிவைவேற்றி வைப்பாள். நாட்கள் பல கடந்தன. கவிதாவைப் பெண் பார்க்க வந்தார்கள். பேச்சுக்கள் நடந்தன. இறுதியாக பெண்ணிற்கு சீதனமாக 5 லட்சம் ரூபாவும் காணியும் நகைகளும் தாங்கோ என்றும் வாற மாதத்தில வரும் முதல் முகூர்த்தத்தில கலியாணத்தை வைப்பம் என கூறினார்கள்.

ஏழ்மைப்பட்ட குடும்பம் அவ்வளவு பெரிய தொகைக்கு எங்கே போகும். கமலத்தின் முகத்தைப் பாத்த மாப்பிள்ளையின் தாயார் சரி இரண்டுநாள் கழிச்சு முடிவை சொல்லுங்கோ என கூறியபடி சென்றார்கள். புறோக்கறே எங்களுக:கு ஏத்த சீதனமாய் வரனை பாருங்கோவன் பெரிய தொகை எண்டால் நான் என்ன செய்வன். என்ர தலைவிதி அவரும் அரைவாசியோட போட்டார். 3 பொட்டையள பெத்திட்டு நான் என்ன செய்யிறது என்று புலம்பியபடி கமலம் சென்றாள்.

இவ்வாறு கவிதாவை பெண்பார்க்க வருவதும் சீதனப் பிரச்சினையால் எல்லாம் கைநழுவி போவதாக இருந்தது. இறுதியாக அவர்கள் குடும்பத்திற்கு ஏற்ற மாதிரி யாழ்ப்பாணத்திலுள்ள கம்பனி ஒன்றில் தொழில் புரியும் மதனுக்கும் கவிதாவிற்கும் திருமணம் சாதாரணமாக நடந்தேறியது. கமலம் தன் ஒரு பிள்ளையை கஷ்டப்பட்டு கரையேற்றியமையை நினைத்துத் தனக்குள்ளே பெருமைப்பட்டாள். கவிதா கணவனின் வீட்டில் சென்று வாழ்கையை நடாத்த ஆரம்பித்தாள். மதன் அவளை வேலைக்குப் போக

வேண்டாமென கூறிவிட்டான். எல்லாப்பெண்களும் போலத்தான் கவிதாவும் தன் மாமியாரைத் தாய் போல நினைத்து இல்லறத்தை சந்தோஷமாக நடத்தி வந்தாள்.

கமலத்தின் நினைவுகள் லலிதா பக்கம் திரும்பியது. அடுத்து லலிதாவையும் ஒரு துணையுடன் சேர்க்கவேண்டும் என்று கோயில் கோயிலாகப் பிரார்த்தித்தாள். கமலம்போல் ஏழைகளை யார்தான் கணக்கிலெடுக்கப்போகிறார்கள். கணவனின் உறவினர்கூட அவளைத் திரும்பிப்பார்ப்பதில்லை. தற்போது லலிதா ஏதோ ஒரு கடையில் வேலை செய்கிாள். மாதம் 2500 ரூபா உழைக்கிறாள். அதாவது உழைக்கிறேன் என்ற மனநிறைவுடன் தன்னைச் சமாதானப்படுத்துவது வழக்கம். லலிதாவைப் பெண் பார்க்க பலபேர் வந்தார்கள். காலத்தின் கட்டளை லலிதாவின் தலைவிதி சீதனப்பிரச்சினையால் எல்லாம் அரைவாசியில் குழம்பிவிடும். இவ்வாறு வயதும் ஏறஏற லலிதா வாழ்வு கேள்விக்குறியாக மாறியது.

பெரும்பான்மையான மாமிமார் மாதிரித்தான் கவிதாவின் மாமியாரும் கலியாணம் முடிந்து மூன்றுமாதம்வரை நல்லவளாகவே இருந்தாள். பின்பு கவிதாவுடன் மதன் இல்லாதபோது சண்டை பிடிப்பதும் அவளின் சீதனத்தை எண்ணி நையாண்டி பண்ணுவதும், கவிதாவின் பிறந்த வீட்டு ஏழ்மையைப் பழிப்பதும் என்ர மகன் எவ்வளவு தங்கம் போன்றவன். ஒரு குடியோ கெட்ட நடத்தையோ இல்லாதவன். அவனுக்கு எண்டுவந்து வாச்சியே நீ. பக்கத்து வீட்டு நல்லமான்ர பெடியன் கலியாணம் செய்தானே ஒரு பெட்டையை அவள்தான் உண்மையான லக்ஸ்மி. எவ்வளவு சீதனம் அப்பப்பா பத்து லட்சம் காசும், ஆறு பரப்பில யாழ்ப்பாணத்தில வீடு, வளவும், தேவையான நகைகளும் கொண்டுவந்துள்ளாள் எனச் சொல்லிச்சொல்லி கவிதாவை இம்சை பண்ணினாள். அதோட நிறுத்தாமல் அவளைப்பற்றி மதனிடம் இல்லாத விசயங்களையும், பொய்களையும் கூறி – கவிதாவுடன் மதன் சண்டையிட வைப்பாள். இவ்வாறு ஒருநாள் தாயின் சொல்லை மீறாத மகன் கவிதாவை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டான். சீதனம் காணாது என்றும், ஒரு குழந்தையைப் பெறத் தகுதி அற்றவள் என்றும் பல காரணங்களைக் காட்டி அவளைத் துரத்திவிட பிறந்த வீட்டு மூலைக்குள் வாழாவெட்டியாக இருந்தாள் கவிதா.

பாடசாலையில் **A/L** இறுதி ஆண்டில் கல்வி கற்கும் ஜீவிதா தனது குடும்ப நிலைக்கு மேலான நிலையிலுள்ள பெரிய கம்பனி முதலாளியின் மகன் சுரேசைக் காதலித்தாள். இருவரும் சந்தித்துப்பேசுவது வழக்கம். அதைக்கண்டு கமலத்திற்கு பலர் வந்து சொல்லியும் தன் மகள் மேலுள்ள நம்பிக்கையால் அதனைப் பொருட்படுத்தாது விட்டாள். பாடசாலைக்குப் பேகின்றேன் என்று கூறிவிட்டு, சுரேசுடன் போவதும், புதுப்படம் பார்க்க இருவரும் செல்வதும் பலநாட்கள் நடந்தன. இவ்வாறு செல்பவள் பார்க் போன்ற இடங்களிலும் சென்று வந்தாள். படிப்பை மறந்து காதலில் மூழ்கினாள். நாட்கள் மாதங்களாகின. அவளின் நிலை மோசமானது, ஜீவிதா கர்ப்பமானாள். அதனைச் சுரேசிடம் சொன்னாள். சுரேஸ் அதனை மறுத்தாள். பின் ஜீவிதா மனம் கலங்க உங்கள் வீட்டில் இதைப்பற்றிச் சொல்லி என்னைக் கல்யாணம் பண்ணுங்கள். இதனை மறைக்க முடியாது. விரைவாகச் செய்யுங்கள். என் நிலை துன்பமானதாக உள்ளது.

இவ்வாறு படபடப்புடன் ஜீவிதா கூற எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைப்பதாக சுரேசின் வார்த்தை காணப்பட்டது. ஜீவி உன்னை நான் கல்யாணம் இப்ப செய்யமாட்டன். எங்க வீட்டில் எனக்குக் கல்யாணம் செய்துவைக்க காலம் இருக்கு என்பாங்கள். அதனால் நம்ம இருவரின்ட நல்லதுக்கும் சொல்லுறன் இதை அழிச்சிடு என்றான். என்ன சுரேஸ் என்ன சொல்லுறீங்கள். இது நம்ம குழந்தை எப்படி அழிக்கச்சொல்ல மனம்வருகுது உங்களுக்கு என்று ஆவேசமாகக் கத்தினாள் ஜீவிதா. இஞ்சபார் ஜீவிதா நான் இப்பவும் உன்னைக் காதலிக்கிறன். ஆனால். கல்யாணம் அதுக்குத் தடையாக இருக்குது. கல்யாணம் செய்ய முன் கர்ப்பமான பெண்ணை தன்ர மகன் திருமணம் செய்ய எந்த அப்பா அம்மாதான் சம்மதிப்பார்கள். அதனாலதான் உதை அழிச்சிடு அல்லது வாயை மூடிக்கொண்டுபோ. இதை வெளியில சொன்னால் உனக்குத்தான் மாணக்கேடு. உன்னைப்போல எத்தனைபேரைக் காதலிச்சன் அப்படிப் பாத்தா இப்பநான் எத்தனையோ குழந்தைகளுக்கு அப்பன். எனத் திட்டிவிட்டுச் சென்றான் சுரேஸ். ஜீவிதா காதலின் வேதனை சுமந்தவளாய் வீடுசென்றாள்.

ஜீவிதா சோம்பலாக இருப்பதைப் பார்த்து அவளின் உடலில் ஏதோ வருத்தம் என்று நினைத்து கவிதாவும் கமலாவும் அவளை வைத்தியசாலைக் குக் கூட்டிச்சென்றனர். வைத்திய பரிசோதனையின் பின், ஜீவிதா மூன்று மாதம் கர்ப்பமாக இருப்பதாக வைத்தியர் கூற இடி விழுந்ததுபோல் ஆனால் கம லம். கடைசிப்பிள்ளை எண்டு செல்லமா வளத்த நீ இப்படிக் கெட்டுப்போய் வந்திருக்கிறியே. எவனோட ஆடப்போனனி என்று சரமாரியாப் பேசினாள் கமலா. சில நேரத்தின் பின் பிள்ளையின் எதிர்காலத்தை நினைத்தவளாய் சுரேஸின் பெற்றோரிடம் சென்று நடந்தவற்றைக் கூறி இருவரையும் சேர்த்துவைப்பம் என்ற எண்ணத்துடன் கமலமும் கவிதாவும் அவனின் வீட்டிற்குச் சென்றனர்.

வீட்டின் அமைப்பே அவர்களின் செல்வ செழிப்பை விளக்கியது. உள்ளே சென்று சுரேஸின் தந்தை பாக்கியராஜாவுடனும் தாயுடனும் இருவரின் காதலையும், அதனால் ஜீவிதா கர்ப்பமாக உள்ள தையும் கூற சுரேஸின் தந்தை தனது பணத் திமிரை யும், அந்தஸ்த்தையும் காட்டினார். என்ர மகன் இப் படிக் கீழ்த்தனமான செயல் செய்ய மாட்டான். நீங்கள் தான் பணக்காரக் குடும்பத்தில் சம்பந்தம் பேச விரும்பி நாடகம் நடிக்கிறியள். சரி அப்ப உங்கட பிள்ளையை மருமகளா ஏற்கிறது என்றால் இருபது லட்சம் காசும், ஐம்பது பவுண் நகையும், வீடு வளவும் சீதனமாகத் தாறது என்றால் அதன்பின் யோசிப்பம். இதில ஒரு கொஞ்சம்கூடத் தரமுடியாத ஏழை நாயள் வந்திட்டுதுகள் பணக்காரப் பாக்கியராஜா வீட்டில சம்பந்தம்பேச. வீட்டுக்கு வெளியில நின்று கைகட்டி நிற்க வேண்டியதுகள். வீட்டுக்குள்ள வந்து சம்பந்தம் கலக்கப்போகுதுகளாம் என அவமானப்படுத்தி அனுப்பிவிட்டார். துள்ளிக் குதிக்கும் இளம் கன்னி வயதில் வயிற்றி ஒரு குழந்தையைச் சுமந்து பாக்கி யராஜா போன்ற இரக்கமற்ற மன வைராக்கியம் உடையவர்களின் செயற்பாட்டாலும், பணப்பேய் பிடித்து அலையும் ஆண் சமுதாயத்தை இவ்வாறு வாழவிட்டால் ஜீவிதா, லலிதா, கவிதாவின் நிலை தான் எல்லாப் பெண்களுக்கும்.

ஸ்ரீ கஜலக்ஷ்மி பத்மநாத ஐயர்
A/L 2006

# அம்மா...

அம்மா.... எந்தன் அம்மா
நினைவு தெரிந்து நாள் முதலாய்
நான் தந்தை முகம் பார்த்ததில்லை – நீயே
தந்தையும் தாயுமாய் இருந்ததனால்
தந்தை பற்றி நான் நினைக்கவே வழியுமில்லை
கருவில் என்னைச் சுமந்த வேளை – நீ
கண்ட துன்பம் நானறியேன்
மண்ணில் வந்ததன் பின்
எனை வளர்க்க நீயுனையே தந்தாய்
எத்தனை துன்பங்கள் சுமந்தாய்
அத்தனையும் என் நெஞ்சில் ஆழப் பதிந்துள்ளது.
இரவுகளைப் பகலாக்கினாய் – உன்
உதிரத்தை உரமாக்கினாய்.
என் நோய் தீர்த்தாய் – ஆனால் உன்
மனமோ நோயினால் சிதைந்து
மன நோயாளியாக மற்றோர் பார்வையில் – நீ
தியாக வேள்வியில் தீய்ந்து போவதை நானறிவேன்
பாலால் வளர்த்த பாவை நான் உன்.
பாச அணைப்பிற்காய் உருகுகிறேன்
நின் முகம் பார்த்து நான் மலர முடியவில்லை.
துயர் சூழ்ந்த உன் துன்பவடுக்கள் என்னை
திகைப்பிலாழ்த்தி வகையறியாது நிற்கிறேன்
கணமும் தவறாது கரிசனையாய் காணும் உன் முகம்
அம்மா என்ற வார்த்தைக்கு பொருள் தருகிறது.
இந்த ஜென்மம் நீ பட்டதெல்லாம் பகற்கனவாகாதோ...?
நோயுற்ற உன் காவல் வலயத்தில்
நொந்த உன் உள்ளதன் வருடலினால்
வாழ்வு தந்த வன தேவதையே நீ.

அ.ஸ்ரீமாசிபா.

# கரைதேடும் ஓடம்

சலனமில்லாத இராப்பொழுது மெல்லமெல்ல விலகத்தொடங்கியது. சத்தம் இல்லாத விடியல் மெல்லக் கண்விழித்தது. அலைகளின் ஜதிகளில் மாற்றம் தெரியவில்லை. வீசிடும் காற்றின் உரசல்கள் கூட இனிதாகவே வருடிச்சென்றன. நிசப்தத்தின் மத்தியில் அந்தக் கடற்கரைக் கிராமம் விடியலில் ஜொலித்துக்கொண்டிருந்தது. கடற்கரையின் மணற் பரப்பை தழுவிச் செல்லும் அலைக்கரங்களின் இயல் பான சந்தம் கேட்டபடி இருந்தது.

கனவுகளிற்குள் சயனித்துக்கொண்டிருந்த திவ்யா வீட்டு வளைக்குள் இருந்த சுண்டெலி அடுப் பங்கரைக்குள் செய்த குறும்புத் தனத்தால் துயில் கலைந்து விழித்துக்கொண்டாள். பாதி இராத்திரி களில் தூக்கத்தைப் பறித்து கனவுகளைக் கலைத்து விடுவது சுண்டெலிக்கு வேலையாகிவிட்டது. நல்ல கனவுதான். ஆனால் நிரந்தரம் இல்லையே என்ற வெறுமையை உணர்ந்துகொண்டவளாய் தங்கைக ளின் தூக்கத்தைப் பறித்துவிடாதவளாய் அடுப்பங் கரைக்கு நகர்ந்தாள்.

காலை உணவுக்கிருந்த பழைய சாதத்தில் சுண்டெலி தன் கைவரிசையைக் காட்டிவிட்டது. மன தில் தங்கைகளுக்கு காலை உணவு என்ன தருவது என்ற நோக்கம் பிடித்துக்கொண்டது. “சே” என சற்று அலுத்துக்கொண்டாள். அவள் அடுப்பங் கரை யைவிட்டு வெளியேறி வரும்போது தூரத்தே கேட்ட அன்னை மரியாள் ஆலயத்தின் மணியொலி நேரம் 5.00 என உணர்த்தியது.

மீண்டும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை. மண்சுவரில் ஒருபுறமாக அமர்ந்துகொண்டு தன் எதிர்காலம் பற்றிய நினைவுகளை அலையவிட்டாள். இத்தனைக்கும் அவள் வயது 16 மட்டும்தான். குடும் பத்தின் வறுமையும் வீட்டில் முதற்பிள்ளை என்ற அங்கீகாரமும் அவளைச் சற்று வயது வந்தவளா கவே எடைபோட வைத்தது. தங்கைகள் “பாமா” கடைக் குட்டி “கமலி” இருவரும் தன்னை அக்கா என்று அழைத்தாலும், திவ்யாவின் மனதில் தாய் போன்ற உணர்வே மேலோங்கி நின்றது. அந்தப் பிஞ்சு உள்ளத்தில் அத்தனை பொறுப்புணர்வு சிறுவயதில் இருந்தே துன்பத்தில் மென்மேலும் அடிபட்டு சிக்கன வாழ்க்கையில் அனுபவம் பெற்றி ருந்தாள்.

அவளிற்கு 10 வயதாக இருக்கும்போது அவ ளது தாய் 3 வது பிரசவத்தில் கணவனையும் தன் 3 பிள்ளைகளையும் பிரிந்து காலனுடன் சென்றுவிட பிஞ்சு மழலையுடன் நிர்க்கதியானாள் திவ்யா. இதுவரை 5 வருடங்கள் தன் கடைசித் தங்கையை வளர்த்துவிட்ட பெருமிதம் அவளுக்கிருந்தது.

திவ்யாவின் தந்தை பீட்டர் ஓர் சாதாரண மீன வன். அன்றாடம் தொழிலுக்குச் சென்றால்தான் ஏதா வது மிஞ்சும். எப்போதாவது தனிமை கிடைக்கின்ற போதெல்லாம் தன்னுள் புரையோடிப் போயிருக்கின்ற எண்ணங்களை அசைபோடுவாள். திறமையுடையவ ளாக இருந்தும் கல்வியைத் தொடர முடியாமல் போனமை அவளை தினந்தினம் நெருடவைத்துக் கொண்டே இருந்தது. 10 வது வயதில் புலமைப்பரி சில் பரீட்சையில் தேறியதை அவள் மறந்துவிட வில்லை. தன்னை ஊக்குவித்த ‘மேரி’ ரீச்சரை அடிக்கடி நினைவுகூர்ந்து கொள்வாள். திறமையான மாணவி என்று எல்லோரும் பாராட்டும்போது தன்னை யறியாமல் அவள் போடும் மிடுக்கான நடை அவள் அழகை மென்மேலும் அதிகரிப்பதென்னவோ உண்மைதான்.

விதிவசத்தால் அடுப்பங்கரைக்குள் முடக்கப் பட்டுவிட்டாலும் அவனுடைய தன்னம்பிக்கையை என்றுமே குறைத்துவிடவில்லை. தன் தங்கைகளை ஓர் நல்ல நிலைக்கு வளர்த்துவிடவேண்டும் என்ற வெறி அவள் பேச்சிலே இடையிலேயே வெளிப்பட்டு விடும். வெறுமைகளை உணரும்போதெல்லாம் சோர்ந்து விடுவது அவளது வழக்கமல்ல. தாயைப் பிரிந்த துயரத்தில் மதுவிற்கு அடிமையாகிய தன் தந்தை பீற்றரை நினைத்து தனிமையிலேயே அழுது தீர்த் துவிடுவாள். பீற்றரின் உழைப்பில் சேமிக்கும் அள விற்கு இடமிருக்கவில்லை. தன் பிள்ளைகளின் தேவைகளை ஓரளவுக்கேனும் பூர்த்திசெய்வதற்கு தந்தை சிரமப்பட்டமையை உணர அவளால் முடிந்தது.

பண்டிகைக் காலங்கள் வரும்போது புத்தாடை வாங்கும் அளவிற்கு அவர்களிடம் பணமிருக்க வில்லை. ஆனாலும் ஓரளவு நல்ல நிலையில் உள்ள ஆடைகளை நன்கு துவைத்து அதை தன் தங்கைக ளுக்கு அணிவித்து அழகு பார்ப்பாள் திவ்யா. மண் சுவரின் மேலாகவுள்ள கிடுகுத்தட்டியில் தொங்கிக் கொண்டிருக்கும் சிறிய கண்ணாடியில் தன் முகத்தை மட்டும் அழகு பாத்துக்கொள்வாள். அன்றிலிருந்து இன்றுவரை அவளது கண்களில் உள்ள வசீகரம் குறைந்துவிடவில்லை.

மற்றவர்களைப் பார்த்து அவள் பொறாமைப்பட் டது கிடையாது. தன்னகத்தே உள்ளவற்றில் திருப்தி கண்டாள். மிட்டாய்க் காரனைக் கண்டு துள்ளிக் குதிக்கும் தங்கைகளின் ஆசையைப் பூர்த்திசெய்வ தற்கு ஒருநாள்கூட அவளிடம் பணமிருக்கவில்லை. அதனை வெளிக்காட்டாது, அவள் அவர்களிடம் கண்டிப்புடன் நடந்துவிடுவாள். கடைக்குட்டி 'கமலி' அவள் முகத்தை அண்ணாந்து பார்க்கின்ற வெற்றுப் பார்வையை சகிக்க முடியாதவளாய் முகத்தை வேறு திசையில் திருப்பிக்கொள்வாள். அக்கணத்தில் நெஞ்சை அடைக்கும் வேதனையுடன் கண்கள் பனித்துவிடும். அப்படியே தன் தங்கையை அள்ளி அணைத்து சிலவேளை மனம்விட்டு அழுதுவிடு வாள்.

'எல்லோரும் பெண்ணாகப் பிறந்துவிட்டோமே நான்மட்டும் ஆணாக பிறந்திருக்கக்கூடாதா' என்று ஆதங்கப்படும் போதெல்லாம் அவளது இயலாமை சில கணங்கள் வெளிப்பட்டுவிடும். ஆனாலும் அந்த ஓலைக் குடிசைக்குள் முடங்கிக்கிடக்கும் அவளது சிந்தனை மட்டும் எப்போதும் வானளாவி வியாபித் திருக்கும். "உனக்கு துன்பம் என்று வந்தால் பின் வாங்காதே அத்துன்பத்தை துரத்தித்துரத்தி அடி" என்று பாடசாலை நாட்களில் தமிழ் ஆசிரியை கற் பித்த பாடம் அவளது அடிமனதில் ஒலித்துக்கொண்டே இருந்தது. அந்தத் துணிவுதான் அவளைப் பலமுறை ஜெயிக்கவைத்திருக்கின்றது.

"அக்கா" 4வது தங்கை பாமா சிணுங்கிய போது அவளது சிந்தனை கலைந்து திடுக்கிட்டு சுத ரித்துக்கொண்டாள். "பாமா" எழுந்து கண்களை கசக்கிக்கொண்டு நின்றாள். புரிந்துவிட்டது அவ ளுக்கு. கடைக்குட்டி கமலி படுக்கைப் பாயில் சிறுநீர் கழித்துவிட்டாள். அது வழக்கம்தான். அவளுக்குப் பழகிப்போய்விட்டது. மெதுவாக எழுந்து ஓலைக்குடி சையின் தட்டியை நீங்கி வெளியே எட்டிப்பார்த்தாள். பொழுது புலந்துவிட்டது. எதிர்வீட்டு பரிமளம் அக்கா கரைவலைக்கு செல்வதற்காக தயாராகி விட்டதைக் காணமுடிந்தது. "என்ன பரிமளம் அக்கா வெளிக்கிட் டாச்சோ" என்று பேச்சுக்கொடுத்தாள். "ஓமடி பிள்ள" என்று சொன்னபடியே தன் பறியைத் துங்கிக்கொண்டு அவர் நடக்க ஆரம்பித்தாள்.

திவ்யா உள்ளே வந்து அடுப்பங்கரைக்குள் சென்று சாம்பல் பூத்துப்போயிருந்த அடுப்பிற்குள் இருந்து கரித்துண்டு ஒன்றை எடுத்து பாமாவிடம் கொடுத்துவிட்டு தானும் ஒன்றை எடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். பாமா பல் துலக்கிக்கொண்டு கிணற்றடிப் பக்கம் சென்றுவிட்டாள். 'திவ்யா பாய் படுக்கையை எடுத்துக்கொண்டு கிணற்றடிக்குச் சென் றாள். சிரமம் தான் என்றாலும் சினத்துக்கொண்ட தேயில்லை. 'சிறுவயதில் எல்லோரும் அப்படித்தான்' என்று நினைத்துக்கொள்வாள்.

முகம் கழுவிவிட்டு குடிசைக்குள் வந்து அருகி லிருக்கும் பொன்னப்பா அண்ணையின் பெட்டிக்கடை யில் 2/= சீட்டிலுப்பில் விழுந்த ஸ்ரிக்கற் பொட்டுப் பக்கற்றை பூரிப்புடன் பிரித்து அதில் ஒன்றை எடுத்து நெற்றில் வைத்துக்கொண்டு கண்ணாடியில் தன்னை

அழகுபார்த்துக் கொண்டாள். அப்போது வெளியே பலர் கூக்குரல் இடுவதைப்போல் கேட்டது. என்ன ஏதுவோ? என்று வெளியே ஓடிவந்தாள். பயந்துபோய் நின்ற கமலி அவளை இறுகஅணைத்துக் கொண் டாள். அவளைத் தூக்கிதன் இடுப்பில் வைத்துக் கொண்டு பரிமளம் அக்கா வீட்டுப் பக்கம் எட்டிப் பார்த்தாள்.

எதிர்த்தாற்போல் ஓடிவந்தவர்கள் "ஐயோ கடல் கொந்தளித்துக்கொண்டு வருகிறது ஓடுங்கோ ஓடுங்கோ" என்று கூச்சலிட்டனர். அதற்குள் கடலில் பெரும் இரச்சலும் சத்தம் கேட்டபடி இருந்தது. திவ்யா தன் கைகள், கால்கள் பதறி ஓடிவந்த "முருகே சண்ணை கடலுக்குப் போனவை வந்திட்டி னமோ" என்று பதட்டத்துடன் கேட்டாள். எதிர்ப்பக் கத்தில் எல்லோரும் தங்களைக் காப்பாற்றிக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தார்கள். ஐயோ! அப்பா தொழிலுக் குப் போனவர் அவள் குளற ஆரம்பித்தாள். சில நொடிக் பொழுதில் அது நடந்துமுடிந்து விட்டது. பெரும் திரளாக நீர் மேலெழுந்துவருவதைக்கண்ட எல்லோரும் விழுந்தடித்து ஓடினார்கள்.

இவ்வாறு இவர்கள் துயருறுவது இதுவே முதற்தடவை. நீர்த்திரளைக் கண்டு பயந்துபோன தன் தங்கைகளை இறுக அணைத்தபடி மரமொன்றை பிடித்துக் கொண் டாள். ஆக்ரோசத்துடன் மோதிய அலைதன் தங்கைகளை தன்னிடமிருந்து பிரித்துச் செல்வதை அவள் தன் இரு கண்களாலும் செய்வ தறியாது பார்த்துக் கொண்டிருந்தாள். ஊரெங்கும் ஒலித்துக் கொண்டி ருந்த மரண ஓலத்தில் அவள் குரலும் ஓங்கி ஒலித்து அடங்கியது.

வாழ்க்கையில் அவளுக்கென இருந்த அனைத் தும் இன்றில்லாத நிலையில் முகாமொன்றில் கூரைச் சுவரை வெற்றுப்பார்வை பார்த்தபடி குந்தி இருக்கும் அவள் கரைதேடும் இடங்களில் ஒன்றோ! காலம்தான் பதில்சொல்ல வேண்டும்.

ஆக்கம் :
க.கலைப்பிரியா
கலைப்பிரிவு 12 $E_2$

## நட்பின் துளிகள்

முந்திக் கொண்டது
என் கண்ணீர்
என் எழுத்துகளுக்கு முன்
கண்ணீர் வடியத் துலங்கியது
எனக்குள் வார்த்தை வரவில்லை
ஏன் இந்தக் குழப்பம்
என்று தெரியவில்லை!
குழம்பிக் கொண்டுதான் இருக்கின்றேன்.

பொய்யாய் தெரியும் நிழலைத்
தேவையில்லா கானல் நீர் என்பர்
ஏனோ இன்று
என் கண்ணீரைக் கண்டும்
அப்படி நினைத்து விடாதே
அத்தனையும் பொய்யாய்
போகாது நம் நட்பின்
அன்புத் துளிகள்!

வந்தது வரட்டும், போனது போகட்டும்
என்று அமையாமல், என்றுமே
நம்மோடு, இன்னும் சில நாட்கள்
மாதங்கள், வருடங்கள் சென்றாலும்
நட்புத் துளிகள் எப்போதும்
சுவடுகள் போல் எம் மனதில்
நிலைத்து நிற்கும்!

லாவண்யா – சு
கலைப்பிரிவு 13 $L_1$

# உங்களுக்குத் தெரியுமா?


1. உலகிலேயே மிகப்பெரிய மாளிகை: வத்திக்கான் மாளிகை
2. உலகிலேயே மிகப்பெரிய ஏரி: சுப்பீரியர் ஏரி.
3. வெள்ளையர்கள் முதன் முதலில் ஆரம்பித்த திணைக்களம்: நில அளவைத் திணைக்களம்.
4. இலங்கையின் மிகப்பெரிய நீர்த்தேக்கம் : ரந்தெனிகல
5. உலகிலேயே ஆழமான ஆழி: மரியானா ஆழி
6. உலகிலே மிகப்பெரிய வானொலி நிலையம்: பி.பி.சி (இலண்டன்)
7. இலங்கையில் காணப்படும் மிகப் புராதன வட்டதாகே: மெரிரிகிரிய, மண்டலகிரிய.
8. கற்காலச் சான்றாக அமைந்துள்ள கட்டடங்கள் : புதய கம்பளை.
9. இலங்கையை தரிசித்த முதல் ஐரோப்பியர் : மார்க்கோ போலோ.
10. இலங்கையின் முதல் சித்திர சிற்பங்கள் நிலையமான நகரம்: அனுராதபுரம்.

தொகுப்பு:
**திருஞானசம்பந்தன் – சராங்கன்**
**கலைப்பிரிவு 2007 A/L (12 $E_2$)**

---

# உண்மையான கல்வி

## சுவாமி விவேகானந்தர்



கல்வி என்பது மூளைக்குள் பலவிடயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல.

வெறுமனே விடயங்களை சேகரிப்பது மட்டும் கல்வியாகிடா. வாசிகசாலைகள் அன்றோ மகான்களாகவும், அகதராதிகள் அன்றோ மகாரிசிகளாகவும் இருக்கவேண்டும்.

நூற்றுக்கணக்கான நூல்களை நாம் படிக்கலாம். குழந்தையின் மனதில் நொடிக்கு ஐப்பதினாயிரம் வார்த்தைகளைத் திணிக்கலாம். கொள்கை, கோட்பாடு கற்பிக்கலாம். ஆனால் உண்மை கற்பிப்பது ஒரே ஒரு விஞ்ஞானம். அதுதான் மனவியல்.

வெறும் புள்ளிவிபரங்களைச் சேகரித்துக் கொண்டிருப் பதல்ல மனதை ஒருமுகப்படுத்துவதுதான் கல்வியின் அடிப்படையான இலட்சியம். உண்மையில் கல்வி என்பது மூச்சை அடக்குவதில் தான் ஆரம்பிக்கிறது.

மன ஒருமைப்பாட்டைப் பெற்ற பின்னர், அப்பரிபூரணமான கல்வியின் ஒருமைப்பாட்டைப் பெற்ற பின்னர், அப்பரிபூரணமான கல்வியின் உதவியால் வேண்டிய பொழுது தேவையான தகவல்களைச் சுலபமாக சேகரித்துக் கொள்ள முடியும். எத்தகைய் கல்வி நல்லொழுக்கத்தை உருவாக்குமோ, மனவலிமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ தன்னம்பிக்கையைத் தந்து ஒருவனைச் சொந்தக் கால்களில் நிற்கும்படி செய்கிறதோ அதுதான் உண்மையான கல்வியாகும்.

**திருமதி வலன்ரீனா இளங்கோவன் B.A (Hons)**

# சுனாமியை ஐக்கியத்தின் ஆணையாகக் கொள்வோம்

நான்கு திசையும் கடலால் சூழப்பட்ட பல்லினங் களைக் கொண்ட பல மத பன்மொழி பேசுகின்ற மக்கள் கூட்டத்தையும் கொண்ட சிறு தீவு நம் இலங்கைத் தாய்த் திருநாடு. நம்மைப்போல பல ஜீவராசிகளைப் பெற்று வளர்த்து வரும் நம் தாய்நாடு, இன்றுபல இன, மத மொழிப்பிரச்சினைக ளால் பிளவு பட்டுக் காணப்படுகின்றது. இப்பிரச்சினை யால் நம் தாய்நாட்டை நாமே அழிக்கும்நிலை காணப்படுகிறது.

எனவே, நம்மைப்பெற்ற இந்தத் தாய்நாட்டை நாம் ஐக்கியத்துடன் வழிநடத்திச் சென்று எதிர்கால சந்ததியை கவலையற்ற நின்மதியான வாழ்வை வாழவைக்கவேண்டும். அதாவது ஐக்கியம் என்று சொல்லும்போது இன, மத, மொழி வேறுபாடின்றி எல்லோரும் ஒன்றாகச் சமத்துவமாக வாழல் ஆகும். இவ்வாறு எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படு வோமானால் நம் சிறு தீவு அபிவிருத்தியில் உலக நாடுகளையே விஞ்சிவிடும் என்பதில் ஐயமில்லை. 'கூடிவாழ்ந்தால் கோடிநன்மை' என்ற முன்னோரின் வாக்குக்கு அமைய எல்லா இன மக்களும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக வாழ்வோமானால் அபிவிருத் தியில் மட்டுமன்றி, அனைத்துச் செயற்பாடுகளிலும் தலைநிமிர்ந்து நிற்கும். இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் ஒற்றுமையாக வாழவேண்டுமா னால் அனைவரும் தாயாக, தந்தையாக சகோதரர்க ளாகப் பழகவேண்டும். இவ்வாறு பழகுவதனால் அனைவரும் ஒரு குடும்ப அங்கத்தவர்களாகி ஒற்று மையுடன் வாழ வழிவகுக்கும்.

இவ்வாறு பன்மொழி பேசுகின்ற நம் மக்கள் இன, மத வேறுபாட்டால் ஒருவருக்கொருவர் பொங்கி எழும்போது அதைப்பார்த்து பொறாமை இழந்த கடலன்னை 26.12.2004 அன்று தானும் பொங்கி எழுந்துவிட்டாள். இந்தப் பயங்கர அலையில் வரு கையே சுனாமி ஆகும். இந்த இராட்சத அலையான சுனாமியினால் பல இழப்புக்களை இலங்கைச் சிறுதீவு சந்தித்துள்ளது. அதாவது, உயிரழிவு, வதி விடச்சேதம், சொத்திழப்பு, மீன்பிடி உபகரணச் சேதம், மானிட இயல்புவாழ்க்கை பாதிப்பு போன்ற பல இழப்புக்களை இச்சுனாமியின் மூலம் ஒரு நிமிடத்தில் இலங்கை எதிர்நோக்கிவிட்டது.

சுமாத்திராவில் கிளம்பிய சுனாமி இலங்கையை வந்தடைய இரண்டு மணிநேரம் எடுத்தது. ஆனால் அது காவுகொண்ட மக்களின் எண்ணிக்கையோ 38,195 ஆகும். இலங்கையில் வடக்கு, கிழக்கு, தெற்கு கரையோரங்களைச் சேர்ந்த பன்னிரண்டு மாவட்டங்கள் இச்சுனாமியால் பாதிப்புக்குள்ளாகியுள் என. அதாவது, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம் பாறை, அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, களுத் துறை, முல்லைத்தீவு, திருகோணமலை என்பவையே சுனாமி வருகைதந்த இடங்களாகும்.

இவ்வாறு சுனாமி பல இழப்புக்களை ஏற்படுத்திச் சென்றபோதும் ஒரு பெரு நலன் ஒன்றையும் செய் திருக்கிறது. அதுதான் இலங்கையில் "இன, மத ஐக்கிய" என்ற விதையை விதைத்துவிட்டுச் சென் றுள்ளது. அந்த விதையை நன்றாகச் செழிப்படையச் செய்வது எமது கையிற்தான் உள்ளது. அதனை உணர்ந்து செயற்படல் வேண்டும்.

சுமாத்திரச் சுனாமி இலங்கைத் தீவில் ஏற்படுத்தி விட்ட பெரு நலன் இன, மத ஐக்கியமாகும். எல்லா

இன, மத மக்களும் நெருங்கிய குடும்ப உறவுகள் என்பதை நிரூபிக்கும் ஒரு சந்தர்ப்பத்தைச் சுனாமி எமக்குத் தந்தது. இலங்கையில் உள்ள மக்கள் தத்தம் துயரங்களில் பங்குகொள்ள சுனாமி வழி வகுத்துவிட்டது. ஏனென்றால் சுனாமியால் பாதிக்கப் பட்டவர்கள். ஓரின, ஒருமத மக்களல்ல. சுனாமி அனைத்து இன, மத மக்களையும் ஏற்றத்தாழ்வின்றி சமத்துவமானக நடத்தி ஓய்ந்துள்ளது. சுனாமி ஏற்றத்தாழ்வின்றி எல்லா மக்களையும் சமத்துவமாக நடத்தியமை 'எல்லோரும் ஒன்றே' என்ற சமத்து வத்தை எமக்கு உணர்த்துகின்றது. எல்லோரும் ஒன்று என்பது எல்லோரும் இலங்கை சிறு தீவின் குடிமகன் என்பதாகும்.

இலங்கையில் ஏற்பட்டிருக்கும் இன, மத - இரா ணுவ, புலிகள் நல்லுறவும், புரிந்துணர்வும் அதிக மாகும். கிழக்கிலங்கையில் முஸ்லிம்கள் தமிழ் மக்களை மீட்பதிலும், போசிப்பதிலும் முதலில் ஈடுபட் டனர். இராணுவ அதிரடிப்படை, தமிழ் மக்களை மீட்பதில் உதவியுள்ளது. கல்லடி இலங்கை இராணு வத்தைச்சேர்ந்த ஏடி வசந்த என்ற இராணுவ வீரர் வெள்ள அனர்த்தத்தில் சிக்கி விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஒதுங்கினார். அவரை மீட்டு தமிழீழப் புலிகள் இராணுவத்திடம் ஒப்படைத் துள்ளனர். இவ்வாறு இன, மத வேறுபாடு பார்காமல் ஒற்றுமையாக எல்லோரும் இணங்கி ஐக்கியத்துடன் செயற்பட்டமை கண்கூடு.

மட்டக்களப்பு – கல்முனை பிரதான வீதியில் பெரிய நிலாவனைக்கும் ஒத்தாச்சி மடத்துக்கும் இடையில் வீதிகளும் பாலங்களும் உடைந்துபோன தால், பெரிய கல்லாறு, கோட்டைக் கல்லாறு போன்ற பகுதிகள் முற்றுமுழுதாகத் துண்டிக்கப்பட்டன. இந் நிலையில் இந்த மக்களுக்கான சமைத்த உணவு, ஏனைய நிவாரணப் பொருட்களைத் தலைகளிலும், தோள்களிலும் சுமந்து சென்று எட்டுக் கிலோமீற்றர் தூரம்வரை நடந்துசென்று பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு வழங்கியவர்கள் அயற்கிராம சிங்கள மக்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் நம்நாட்டு மக்கள் பலர் துன்பப்படும்போதும், பலர் இன, மத வேறுபாடின்றி தமது சிரமத்தையும் கணக் கிற் கொள்ளாது உதவும் மனப்பாங்கு கொண்டவர் கள் என்பதை அறிய முடிகின்றது. இதன் மூலமும் நம் நாட்டின் ஐக்கியத்தினைக் காணக்கூடியதாக உள்ளது. இவை எல்லாவற்றிற்கும் மேலான ஜனாதி பதி சந்திரிகா குமாரதுங்க அவர்களும் ஒரு பெண் போராளியும் கிழக்கில் ஒரு முகாமில் கைகுலுக்கிக்க கொண்டனர். இந்தச் செயற்பாட்டை, நம்நாட்டின் ஐக்கியத்தின் ஆணையாக்க கொண்டு செயற்பட்டு நம் நாட்டின் முன்னேற்றத்துக்குக் கைகொடுக்க வேண்டும்.

முக்கியமாக இலங்கையில் மீண்டும் யுத்தம் வெடிக்கலாம் என்ற நிலையை இல்லாமல் செய்தது. இந்தச் சுனாமி அனர்த்தம்தான். ஆகவே நாம் ஒருவருக்கொருவர் மோதுவது எமதுநாட்டைச் சூழ்ந்திருக்கும் அந்தக் கடல் அன்னைக்கே பொறுக்கவில்லைப்போலும். அதனால்தான் அது சீற்றம் கொண்டு நம்நாட்டில் நடைபெறவிருந்த யுத் தத்தைத் தடுத்து நம் நாட்டு மக்களின் ஐக்கியத்தை வெளிக்கொணர வைத்தது. இதனால் சுனாமியை ஐக்கியத்துக்கான ஆணையாகக் கொண்டு நாட் டினை மீளக் கட்டியெழுப்புவோம்.

கடலில் அலை அடிப்பதும் தணலில் அனல் இருப்பதும் எப்படியோ அப்படித்தான் துன்பமும் துயரமும் எனக் கருதி இச்சுனாமிப்பேரழிவை ஒரு அரிய சந்தர்ப்பமாகக் கொண்டு அதனை ஐக்கியத் தின் ஆணையாகக்கொண்டு பாதிக்கப்பட்டிருக்கும் இலங்கைச் சிறு தீவினை தேசிய ஐக்கியத்தின் ஆணையாக்க கொள்வோம்.

ஆக்கம் :
தர்சினி – பா
கலைப்பிரிவு 13 $L_1$

# ஏற்றம் பெறும் தமிழ்மொழி

"கல்தோன்றி மண்தோன்றா காலத்திற்கு முன்தோன்றிய மூத்த தமிழ்" என்று தமிழ் தோன்றிய வரலாறைக் கூறலாம். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பரதிதாசன் கூறியுள்ளார். தமிழ் மொழியானது காலத்தால் அழியாத காவியம் நிறைந்தது. தமிழ் வளர்த்த கவிஞர்களில் கம்பன் தனது பாடலிலே கரும்பு எவ்வாறு இனிமையானதோ அதைப்போன்ற இனிமையை சொட்டச்சொட்ட கவியமைத்துள்ளார். அவ்வாறே தேசத்தின் உயர்விற்கும் பாடல்பாடி ஒரு தேசபக்தனாக தமிழ் மொழியிலும் சுதந்திர உணர்ச்சி யிலும் பொங்கித் ததும்பும் உயிர்க் கவிதைகள் மூலம் அவர் தமிழர் உள்ளத்திற் சாகாவரம் பெற்றுத் திகழ்கிறார். இவ்வாறு தமிழின் பெருமை இன்று வரை ஏற்றம் பெற்றுக் கொண்டே செல்கிறது. இருபத் தொராம் நுற்றாண்டில் கூட தமிழ் மொழி நிலைத்து நிற்கின்றது என்று கூறலாம். கணினியுகம் வந்தாலும் விஞ்ஞானயுகம் ஆனாலும் தமிழின் சிறப்பு அழியாது. தமிழ் மேலும் வளருமே அன்றி மறையாது.

தமிழர் தமிழராக வாழும் காலம் வரை தமிழ் தன்மணம் வீசி மென்மேலும் வளர்ச்சி பெறும் என்ப தில் எவ்வித அச்சமில்லை. தமிழ்மொழி ஒரு அற்புத மான கலைகள் மிகுந்த மொழியாகும். தமிழுக்கு நிகரான மொழியை இப்பாரில் நிகரான மொழியை இப்பாரில் நாம் எங்கும் காணமுடியாது. அவ்வளவு சிறப்பு வாய்ந்தது நம் தமிழ்மொழி. தமிழுக்கும் அமுதென்று பெயர். அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எந்தன் உயிருக்கு நேர்" என்று ஒரு கவிஞர் அரு மையாகக் கூறியுள்ளார்.

முத்தமிழ் வித்தகர் என்று சுவாமி விவேகானந் தர் போற்றப்படுகிறார். அத்தகைய முத்தமிழாகிய இயல், இசை, நாடகம் தமிழுக்கு எல்லை என ஔவையார் தனது பாடலிலே கூறியுள்ளார். நல் லருட்செல்வமும், நற்பண்பும், நல்லறிவும், ஞானமும் கிடைக்க தமிழ் மொழியே நமக்கு துணைபுரிகிறது. நக்கீரன் திருமுருகாற்றுப்படை எழுத வழிவகுத்தது தமிழ் மொழியாகும். அதாவது முருகன் நல்ல தமி ழிலே அடி எடுத்து கொடுத்தமையால் திருமுரு காற்றுப்படை தமிழில் தவழ்கிறது. தாய்தந்த கண் ணீரிலும் தந்தையின் இரத்தத்திலும் தமிழின் பெருமை மேலானது. சொல்லால் தமிழால் உலகையே வெல்லலாம். இவ்வாறான சிறப்புப்பெற்ற தமிழ் மொழியை போற்றி வளர்த்து மென்மேலும் வளர்ச் சியடைய நாம் வழிவகுக்க வேண்டும்.

கம்பனின் கன்னித்தமிழ் என்பது தமிழகத்தில் மட்டும் அல்லாமல் கடல்கடந்து வாழக்கூடிய தமிழ் நெஞ்சங்களுக்கும் அங்கிருக்கும் மக்களுக்கும் கம்பன் கன்னித்தமிழ், புகழ் என்பவற்றை நாம் வளர்த்து தமிழை வளர்ச்சிப்படிக்கு கொண்டு செல்ல வேண்டும். தமிழ் மொழிக்கு ஒரு வரலாறு உண்டு. தனித்துவமும் உண்டு என்பதை மொழியியல் வல்லு நர் ஆகிய தத்துவமும் உண்டு என்பதை மொழியி யல் வல்லுநர் ஆகிய தத்துவர் வீரமாமுனிவர் போன்ற பிறமொழி அறிஞர்களும் விபுலானந்தர் அடிகள், சிவ ஞானமுனிவர், பேராசிரியர் வரதராஜன் போன் றோரும் வரலாற்று ரீதியாக ஆராய்ந்து நோக்கியதை காண முடிகின்றது. இனிய மொழியாகிய தமிழ் பழமையும் செம்மையும் வாய்ந்தது. இது வரலாற் றுக்கு முறபட்டது. தமிழ் மொழியை வளர்க்க பலரும் பாடுபட்டனர்.

ஆரம்பத்திலே தமிழ்மொழிக்கு சங்கம் அமைத்து தொல்காப்பியர் தமிழை வளர்த்தார். இத்தமிழ் மொழியானது உயிர், மெய், ஆயுதம் எனவும் தமிழ் நெடுங்கணக்கியல் இருநூற்று நாற் பத்தேழு எழுத்துக்கள் கொண்டு தோற்றம் பெற்று காலம் காலமாய் நாகரிகம் அடைந்துள்ளது. மொழி யும் மனித நாகரிகம் அடைந்து "தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்ற வாக் கில் காற்றுக்கு கடிவாளம் பூட்டிய கப்பலோட்டிய தமிழனில் இருந்து தமிழில் மொழிபேசியவன் பரந்து பட்டிருப்பதை நாம் காணமுடிகின்றது.

இவ்வாறு தோன்றிய தமிழ் மொழி மேலைத் தேய மொழிகளோடு எம் மொழியினை ஆராய்ந்த

போது நல்ல பெருமையும் நற்புகழையும் எமக்கு ஈட்டித்தந்தது தமிழ் மொழி. இத்தகைய தனித்து வமான தமிமொழிக்கு வரலாற்றிலே முதல் தோன் றிய நூல் என்ற சிறப்புக்கும் உரியதாகும். இத்தமிழ் மொழி தொல்காப்பியம், வீரசோழியம் போன்ற இலக் கண நூல்களை அமைத்து தமிழ் வரலாற்றைப் பெரும் கதைகளாக குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்புக் குரியது. இவ்வாறு தற்காலத்திலும் தமிழ்மொழி துலங்கி எதிர்காலத்திலும் தமிழ்மொழி ஏற்றம்பெற தமிழர்களாகிய ஒவ்வொருவரும் தமிழைப் பேணி வளர்க்க வேண்டும். அன்று தமிழ்மொழி வரை வித்திட்ட பெரியவர்களோடு ஔவையார், இளங் கோவடிகள் போன்றோரின் அளப்பரிய பணிகளையும் அவர்களின் கவியாற்றல், மொழியாற்றல் போன்ற வற்றை வளர்த்து நம் எதிர்கால சந்ததியினருக்கு வித்திடவேண்டும்.

வள்ளுவர் தனது மொழியாற்றலால் திருக் குறளை தந்தமையால் வான்புகழ் கொண்ட தமிழ் நாடு என்று கூறுவர். கர்நாடக கங்கீதத்தில் கூட சுத்தானந் தபாரதி இராக மாளிகையில் "கலைகள் மிகுந்த எங்கள் தமிழ் வாழ்கவே...." என்று தமிழ் மொழியின் சிறப்பை அழகாக பாடியுள்ளார். அரும் பெரும் பொக்கிஷமாக திகழும் தமிழ் மொழியை பேணிப்பாதுகாத்து வளர்த்தல் வேண்டும். தமிழ் மொழி ஏற்றம் காணவேண்டும். தமிழ் என்றும் தனித் துவமாக உயர்ச்சி பெறவேண்டும் என்றும் இனிமை யான ஏற்றம் தமிழ்மொழி எப்போதும் சிறப்பான மொழியாக வளரவேண்டும் என்றும் இன்பம் பெருகும் அருமையான மொழி தமிழ்மொழி.

தமிழ் மொழியில் பற்பல காவியங்கள் காணப் படுகின்றன. தமிழ் மொழி வளர்ச்சி பெற்றதோடு நின்றுவிடாமல் இனிவரும் காலங்களில் தமிழ்மொழி மென்மேலும் ஏற்றம்பெற வேண்டும். ஏற்றம் பெறும் தமிழ் வளரும் உலகம் என்றும் புதியது.

*கன்னித்தமிழ் வாழ்க!*
*கலைகள் மிகுந்த எங்கள் தமிழ் வாழ்க!*
*ஏற்றம் பெறும் தமிழ் வாழ்க!*
*வாழ்க தமிழ்! வாளர்க தமிழ் மொழி!*

ஆக்கம் :
வி.அனுத்திரிகா 11 $A_1$

## அன்புடன் உங்களுக்கு

- பிறர் உங்களைக் கண்டு தண்டிக்கும் முன் உன் னிடமுள்ள குற்றங்களைக் காண்.
- சாவில் பல ஒன்றாகும் - வாழ்வில் ஒன்று பல வாகும்.
- தினமும் தாம் செய்யும் வேலைதான் நமக்கு உற்ற தோழன்.
- சுகத்தைக் கண்டு மகிழாதே அது துக்கத்தின் ஒருவித அலங்காரம்.
- துன்பங்களை உன்னிடம் குடி வைக்காதே அது உன்னை இறுதியில் அழித்துவிடும்.
- கோவப்பாம்பு குழலுக்கு அடங்கும் - கொதிக்கும் நெஞ்சைக் குளிர்மொழி அணைக்கும்.
- கடனோடு காலையில் எழுவதைவிட பட்டினி யோடு இரவில் படுப்பது மேல்.
- எழுந்திரு! விழித்திரு! கருதி கருமம் கைகூடும் வரை உழைத்திரு.
- அவசரபுத்தியும் அடங்கா முன்கோபமும் அன்பின் பலனைக் கெடுக்கும். சாந்தமும் சற்குணமும் சதா பலனைக் கொடுக்கும்.
- எவன் தனக்கு சம்மந்தமற்றதாயும் உனக்கு ரகசியமாய் உள்ளதுமான விஷயத்தை கூர்மை யாய் விசாரிக்கிறானோ அவன் விஷயத்தில் கவனமாயிரு.
- மூடர்களின் நட்பில் உயிர் வாழ்வதைவிட விவேகி கள் பகையில் வாழ்வதே மேல்.
- நெஞ்சில் குற்றமுள்ளவனுக்கு ஒவ்வொரு கண் ணும் தன்னையே பார்ப்பதுபோல் தோன்றும்.
- மனநிறைவு கொண்ட மனிதன் எந்த நேரத்திலும் ஏழையாக இருப்பது இல்லை. மனநிறைவு இல் லாவன் எப்போதும் பணக்காரனாக இருக்க முடி யாது.
- இருளில் பயப்பிடும் குழந்தையைவிட வெளிச்சத் தில் பயப்பிடும் மனிதன் மோசமானவன்.
- அமைதியாக இருந்தால் எவரையும் வசப்படுத்தி விட முடியும்.
- உலகை அறிந்தவன் வெட்கப்படமாட்டான். தன்னை அறிந்தவன் அகம்பாவமடையமாட் டான்.
- மேன்மையை நாடிச்செல்பவனுக்கு சிறு குறை கள் உறுத்தாது.

வி.கார்த்திகா

12 $E_2$

# இருள் நிறைந்த உள்ளம் பிரகாசமானது

கதிரவன் தனது பொற்கரங்களை அகல விரித்து உலகமெல்லாம் பிரகாசமளித்துக்கொண்டிருந்தான். கதிரவனின் பிரகாசத்தைவிட பலமடங்கு பிரகாசமாக சுமதி என்ற ஒரு பெண் இன்று காணப் படுகிறாள். நான் அவளையே பார்த்தபடி நின்றேன். அவளைப் பார்க்க எனக்கு ஒருபுறம் வேதனையாகவும், மறுபுறம் பெருமிதமான சந்தோசமாகவும் இருந்தது. இன்று அவள் பிரகாசிக்கின்றாள். அன்று அவள் பட்ட வேதனைகள் நாவால் சொல்ல முடியாதவை.

ஆம் யாழ் நகரில் உள்ள நீர்வேலி என்னும் கிராமத்திலேயே சுமதியின் குடும்பமும் இருந்தது. சுமதியின் அப்பா வரதன் ஒரு விவசாயி. அம்மா குடும்பப் பெண். வீட்டிலேயே இருப்பாள். சுமதியின் அம்மாவுக்கு 1990ம் ஆண்டு ஒரு மகன் பிறந்தான். அவன் பெயர் தினேஸ். பின்பு 1992ஆம் ஆண்டு சுமதி பிறந்தாள். இவளின் பின்பு சுமதி அம்மா லீலாவதிக்கு ஒரு பெண் குழந்தையும், பின் சில வருடங்களின் பின் ஆண் குழந்தையும் பிறந்தனர். சுமதியின் தம்பி ரமேஸ் பிறந்ததும் தன் கடமை முடிந்துவிட்டது என நினைத்து இவ்வுலகை விட்டே சென்றுவிட்டன் சுமதியின் தாய் லீலாவதி அன்று சுமதிக்கு வயது பத்து மட்டுமே. அன்றில் இருந்து சுமதியின் அப்பா வரதனுக்கு மனநிலை பாதிப்படைந்து எந்த நேரமும் "என்ர லீலா.... என்னையும் கூட்டிக்கொண்டு போ நானும் வாறன்" எனப் புலம்பியபடியே இருப்பார். அவருக்கு உலகில் நடக்கும் நிகழ்வுகள் எதுவுமே நினைவில் இல்லை. எப்பொழுதும் "லீலா லீலா" என்றே புலம்புவார். இச்சூழ்நிலையில் தான் சுமதியின் அண்ணன் தினேஸ் நீர்வேலி பாடசாலை மைதானத்தில் தன் நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கும் வேளையில் இனக் கலவரத்தின் போது தீவிரவாதிகள் புதைத்த மிதிவெடி தினேஸின் இரு கால்களையும் எடுத்துவிட்டது. அன்றில் இருந்து வீட்டுச் சுமைமுழுவதும் சுமதியின் தலையிலேயே திணிக்கப்பட்டது. இவ்வாறு கூறுவதை விட சுமதியே வீட்டுச் சுமைகளை தனதாக்கிக் கொண்டாள் எனக் கூறலாம்.

சுமதி வீட்டுவேலைகள் அனைத்தையுமே காலை நான்கு மணிக்கு எழுந்து செய்து முடித்து தன் அண்ணன், அப்பா ஆகியோரைக் கவனித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்து கைக்குழந்தையான தன் தம்பிக்கு போச்சியில் பால் பருக்கி தன் அண்ணனிடம் இருந்த இடத்திலேயே தம்பியைப் பராமரிக்குமாறு கூறிவிட்டு தன் தங்கையையும் அழைத்துக் கொண்டு பாடசாலைக்குச் சொல்வாள். எவ்வளவு தான் கஷ்டங்கள் இருந்தபோதிலும் அவள் தன் படிப்பைக் கைவிடாது கவனமாகப் படித்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிதிறமைச் சித்தியும் அடைந்தாள். இதுவரை படித்த அவளால் மேலும் படிப்பைத் தொடர அவள் குடும்ப சூழ்நிலை இடம் கொடுக்கவில்லை. சுமதி படிப்பை நிறுத்திவிட்டு ஒரு பணக்கார வீட்டுக்கு வேலைக் காரியாகச் செல்கிறாள். பத்து வயதில் வேலை

செய்யப் போகின்றாள். பிஞ்சு உள்ளம் வெதும் புகிறது. சின்னா பின்னமாக சிதறுகிறது அவள் மனம்.

சுமதி வேலைக்குப் போகும் வீட்டில் குடும்பப் பெண் கமலா, எஜமான் ஆனந்தன். மகள் சுவர்ணா, மகன் கண்ணன் எனச் சிறிய கருக் குடும்பம் அக்குடும்பம். சுமதி வேலைக்குச் சேர்ந்து இரண்டாவது நாள் சாதுவாக இருந்த கமலா தன் சுயரூபத்தை காட்டலானாள். சுமதிக்கு அடுக் கடுக்காக கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டது. "ஏய் சுமதி இப்படி எல்லாம் ஒம்பது மணிக்கு வந்து நாங்கள் தேத்தண்ணி தர குடிக்கிற வேலை எல்லாம் இனிச் சரிவராது வெள்ளன ஆறு மணிக் கெல்லாம் வேலைக்கு வந்திடனும் காலை வேலை எல்லாம் பத்து மணிக்கே முடிச்சு மத்தியானச் சாப்பாடு செய்யத் துவங்கிடனும் நான் பியூட்டி பார்க்குக்கு போய் பன்னிரண்டு மணிக்கு வந்திடு வன். வரும்போது மேசேல அறுசுவை உணவு எனக்காகக் காத்திருக்கணும். என்ன புரியுதா? இம் வேலையைச் செய்யத் துவங்கு" பாவம் சுமதி என்ன செய்வாள் கமலம் கூறியமைக் கேட் டபடி நின்ற சுமதி தலையாட்டி பொம்மை போல தலையை ஆட்டியபடி "சரி செய்யிறம் அம்மா.." என நடுங்கியபடி கூறினாள்.

நாட்கள் நகர்ந்தன சுமதிக்கும் வயது பதி னைந்து ஆகிவிட்டது. சுமதியின் தம்பியும் தங்கை யும் சுமதியின் ஊக்கத்தினால் படிப்பில் முன்னிலை யிலேயே நின்றார்கள். சுமதியின் அப்பாவும், அண் ணாவும் தங்கள் நிலையை உணர்ந்து நாளொரு மேனியாய் வாடிச்சருகாகிக் கொண்டே இருந்தனர். இவள் வேலை செய்யும் இடத்திலேயோ நாவால் சொல்லி வடிக்க முடியாத வேதனைகள், துயரங் கள், சித்திரவதைகள், கொடுமைகள் என கமலா வால் சுமதிக்கு ஏற்பட்டது. ஒரு நாள் சுமதி சமைக்கும்போது கறிக்கு உப்புப் போட மறந்ததால் சுமதிக்கு விறகுகட்டையால் அடித்தும் நெருப்பால் சுட்டும் விட்டாள் கமலா. இவற்றை எல்லாம் கமலா வின் கணவரும், பிள்ளைகளும் பார்த்து வேதனை அடைந்தனர், ஆத்திரமடைந்தனர். சுவர்ணாவின் அப்பா அதாவது கமலாவின் கணவர் ஆனந்தன் சுமதிக்கு புடவைகள் வேண்டிக் கொடுப்பார். சுவர்ணா சுமதியை நொந்த அலுவரல் செய்ய விடாது தானும் சேர்ந்து சுமதியுடன் வேலை செய் வாள். கண்ணன் சுமதிக்கு பாடம் சொல்லிக் கொடுப்பான். இவையாவும் கமலாவுக்குத் தெரியாது. இவை கமலாவுக்குத் தெரிவதற்கு கமலா வீட்டில் இருந்தால் தானே பியூட்டி பார்க், பல வகையான கழகங்கள் என செல்வாள்.

ஒருநாள் சுமதியின் பிறந்த நாளை அறிந்த சுவர்ணாவும், கண்ணனும் சுமதியின் பிறந்த நாளன்று "சுமதி பிறந்தநாள் வாழ்த்துக்கள் உனக்கு, இந்தா உனக்கு நாங்கள் பிறந்தநாள் பரிசாக சங்கிலியும், காப்பும், சட்டையும் கொண்டு வந்திருக்கிறோம். நீ போய்க் குளித்துவிட்டு இவற்றையெல்லாம் அணிந்துகொண்டுவா நாங்கள் எல்லாரும் கோயிலுக்குப் போவம்" என்று சுவர்ணா கூற. "ஏங்க உங்களுக்கு இந்த வேலையெல்லாம் எனக்கே என்னோட பிறந்தநாள் நினைவில்லை.... வேண்டாம் சுவர்ணாம்மா இதை எல்லாம் உங்க அம்மா அறிஞ்சா என்னைக் கொன்று தொலைச்சி டுவா. பிளீஸ் இதெல்லாம் வேண்டாம்" என அழுது அழுது கூறினாள் சுமதி. " நாங்க இருக்கும்போது நீ ஒன்றுக்கும் பயப்படத்தேவையில்லை அம்மா வாம் அம்மா இவவும் ஒரு அம்மா என்று நீ பயப் பிறியா இவள் எங்களுக்கு அம்மா இல்லை ராட் சஸி... ம் போ போய் குளித்து உடை மாற்றி வாம்மா, போம்மா" எனக் கண்ணன் அன்பாகக் கூறினான். சுமதியும் உடை மாற்றிவர மூவருமாக கோயிலுக்குச் செல்லும்போது அவர்களை ஒரு அதிர்ச்சித் தகவல் காத்திருந்தது.

"சுவர்ணா... பிள்ளை சுவர்ணா உங்கம்மா கமலா லொறி அடித்து அக்சிடன்ற். பெரியாஸ் பத்திரியில சேர்த்திருக்காம்" என அயல்வீட்டு கண்ணம்மாக்கா கூற சுமதி பதைபதைத்துப் போய் விட்டாள். உடனே வைத்தியசாலைக்கு செல்கி நாள். அங்கே கமலா அவசர சிகிச்சைப் பிரிவில்

சேர்க்கப்பட்டிருந்தாள். அவளுக்கு உடனடியாக ஒரு கண்ணும், கிட்னி ஒன்றும், இரத்தமும் தேவைப் பட்டது. "என்ன செய்வது யாரிடம் இவற்றை வேண் டுவது நான் இரத்தம் கொடுக்கத் தயார். ஆனால் கிட்னியும் கண்ணும் யாரிடம் வேண்டுவது" என சிந்தித்துக்கொண்டிருந்தவேளைதான் அவளை மேலும் அதிர்ச்சிக்குள்ளாக்க வைத்தது ஒரு காட்சி. சுமதியின் அப்பா வீட்டில் நெஞ்சுவலியில் அவஸ்தைப் படுவதை பார்த்ததும் இவளின் அண் ணன் தன்னுடைய கால் ஊனம் என்பதையும் மறந்து காப்பாற்றச் சென்றபோது நிலத்தில் வீழ்ந்து சுயநினைவு இல்லை. இவர்கள் இருவரையும் அயல் வீட்டு மாணிக்கம் மாமா வைத்தியகாலைக்குக் கொண்டுவந்தார். இதைப் பார்த்த சுமதி மூர்ச்சை அடைந்துவிட்டாள். டாக்டரும் இவர்களைக் காப் பாற்ற முடியாது எனக் கைவிரித்துவிட நினைவு வந்தவளாக சுமதி சிந்தித்து முடிவும் எடுத்து விட்டாள். தன்னுடைய அப்பாவின் கண்ணையும், அண்ணாவின் கிட்னியையும் தன்னுடைய இரத் தத்தையும் கமலாவுக்கு தானமாக வழங்கி கமலா வின் உயிரைக் காப்பாற்றினாள் சுமதி.

சுமதியை எல்லோரும் பாராட்டினார்கள். விடயம் அறிந்த கமலா சுமதியிடம் மன்னிப்புக் கேட்டது மட்டுமல்லாமல் சுமதயையும், சுமதியின் தங்கை, தம்பியையும் தனது வீட்டிலேயே தங்க வைத்து தன் பிள்ளைகள் போல அவர்களையும் வளர்த்தாள். சுமதி இப்போ மறுபடியும் பாடசாலை செல்லத் தொடங்கிவிட்டாள். ஆம் சுமதியின் இருண்ட உள்ளத்தால் தன்னை உருக்கி ஏனை யோருக்கு பிகாசம் அளித்தமையால் இன்று சுமதி யின் இருள் நிறைந்த உள்ளம் பிரகாசமாகவே விளக்குகின்றது.

த.சங்கீதா
கலைப்பிரிவு (2006)

# நிஜமான நினைவலைகள்

வாழ்வினை வாழவந்து அவ்வாழ்வின்
சாபங்கள் நிஜமாக
பொய்மையின் வேஷத்தில் பிடியுண்டு
வாழ்வு துன்பமானது

சுகமான ராகத்தோடு
சுதி சேர்த்து லயிக்கும் போது
அந்த நினைவுகள் என் நெஞ்சை பிளக்கின்றது
எனக்கு மட்டுமா இப்படி
இல்லை என்னை போன்ற பலருக்கும்
காலத்தின் கண்ணாடி கண்ணிமைப் பொழுதில் உடைந்தாலும்
அச்சுவடுகள் அந்நினைவலையை தாக்குகின்றது.

நினைவுகள் சுமையானது
வாழ்வின் அர்த்தம் தேடியபோது ஓரளவு புரிந்தது.
அதுவும் வாழ்வின் அர்த்தமாகியது – ஆனாலும்
புதிய அத்தியாயம் புதிய நினைவலையுடன் லயிக்கிறது.

கவிதா – ச
கலைப்பிரிவு 13 L1

# கலை

கலை என்ற பதத்தை ஓர் வாக்கியத்தில் விளக்கிவிட முடியாது. அது பல்வேறு அறிஞர்களால் பல்வேறு வகையில் விளக்கப்பட்டுள்ளது. கலை என்பது உணர்வுகளின் வெளிப்பாடு ஆகும். **R.G. Colling wood** என்பவர் கலை பற்றி விளக்குமிடத்து கலைஞானவன் உணர்ச்சி பூர்வமான மனநிலைகளினால் தூண்டப்படுகின்றான் என்றும் அத்தகைய நிலையை வெளிப்படுத்துவதற்கு ஒரு ஊடகத்தைக் கண்டுபிடிக்கும்வரைதான் தூண்டப்படும் உணர்வு நிலையை, அதன் இயல்பை, அதன் மூலத்தை அறிந்துகொள்வதில்லை என்றும், கலைஞனது உணர்ச்சிகள் ஒரு வடிவத்தைப் பெறும்போது கலை என்ற பெயரைப் பெறுகின்றன என்றும் கூறுகின்றார். ஸ்ரீ அரவிந்தர் அழகைக் கண்டுபிடித்தலும், அதனை வெளிப்படுத்தலும் கலை என்கிறார். தான் பெறுகின்ற அனுபவத்தைப் பிறரும் அனுபவிக்கச் செய்வதே கலை என்று 'எரிக் நியூட்டன் **(Eric Newton)**' என்பவரும், இறையுணர்வு ஞானத்தின் அனுபவங்கள் தான் கலை என **Dr.**ஆனந்தகுமாரசுவாமி அவர்களும் கூறுகின்றார்கள். இவ்வாறு அறிஞர்கள் கலை என்றால் என்ன? என்பதற்கு பல்வேறு விளக்கங்களைக் கூறுகின்றார்கள். ஆனால் **Nelson Good man** என்பவர் கலை என்றால் என்ன என்ற வினாவுக்கு ஒரு படைப்பு அல்லது ஆக்கம் எப்போதும் கலையாகிறது என்ற கருத்தை முன்வைக்கின்றார். இக்கருத்தே பொருத்தமுடையதாகத் தெரிகின்றது.

தமிழிலே "கல்" என்ற வினை அடியிலே இருந்து கலை தோன்றியதாகக் கருதப்படுகின்றது. கல்லுதல் அல்லது தோன்றுதல் என்ற பொருளிலே உள்ளத்து உணர்வுகளை வெளிக்கொண்டு வருகின்ற ஒன்றாகக் கலையைத் தமிழர்கள் கையாண்டார்கள். கலை என்பதற்குச் சாதுரியம், திறமை எனப் பொருள் கூறுவாரும் உளர். ஒருவன் தன்னிடத்திலேயுள்ள திறமையை வெளிக்கொணர்கின்ற தன்மையைக் கலை எனக் கருதுகின்றார்கள்.

வடமொழியிலே "கலா" என்ற அடியிலிருநதே கலை தோன்றியதாக இன்னோர் கருத்தும் உண்டு. கலா என்பதற்கு 'வளர்த்தல்' என்பதே பொருள். எனவே, திறமைகளை வளர்த்துக்கொண்டு போதல் கலையாக இருக்கவேண்டும். பொதுவாக ஒவ்வொரு வரிடத்திலும் சில திறமைகளும், குணாதிசயங்களும் காணப்படுகின்றன. ஆனால் சிலரிடம் அத்திறமைகள் தனித்துவமாகக் காணப்படும்போது அது கலையாகப் பரிணமிக்கின்றது என்று கூறுபவர்களின் கருத்தும் இங்கு மனம் கொள்ளத்தக்கதொன்றாகும். மெய்ப் பொருளின் முற்றத்திலிருந்து நம்மைக் கருவறைக்கு இட்டுச் சென்று உலகைக் கடந்துநிற்கும் ஒரு காட்சியாக எமக்கு காட்டுவது கலை என்றும், பொதுவாக வேதம், ஞானம், திறன் ஆகியவற்றின் பருத்த பேருண்மையே கலை என்றும், உணர்வின் வெளிப் பாடே அவ்வுணர்வைப் பிறருக்கு வெளிக்காட்டும் போது தோன்றும் நிலை கலை என்றும் பலவாறாகக் கருதப்படுகின்றது. பிரபஞ்சம் சூழ்ந்த எமது இந்து மதத்திற்கு சரியான வரைவிலக்கணம் கூறமுடியாது என்பதே எனது முடிவாகும். இதனையே கலை வரலாற்றை ஆராய்ந்த **Nelson good man** என்பவர் கலை என்றால் என்ன? என்று வரையறுத்து வரைவிலக்கணம் கூற முயலும் முயற்சி பயனற்ற ஒன்றாகும் எனக் கூறுகின்றார்.

கலைகளுடைய எண்ணிக்கை பற்றிக் கருத்து வேறுபாடுகள் நிலவி வருகின்றது. இதற்குள் இந்துக் கலைகள் எவை? தமிழகக் கலைகள் எவை என்ற சர்ச்சையும் உண்டு. கலைகளின் எண்ணிக்கை பற்றி சரியான தகவல்கள் இல்லாத இடத்தும் இலக்கியச் சான்றுகளை அடிப்படையாக வைத்து அவற்றை 'அறுபத்துநான்கு' எனும் மரபு இந்து மதத்திலே உள்ளது. கற்றற்குரியவற்றை எல்லாம் கலை என்னும் சொல்லால் வழங்கும்முறை அது.

*"ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்*
*ஏய உணர்விற்கும் என்அம்மை...."*

என்ற குமரகுருபரர் கருத்தானது இந்த அறுபத்துநான்கு கலைகளையும் அன்னை தெய்வமாகிய சக்தியே ஆக்கி அருளினாள் என்பதைப் புலப்படுத்துகின்றது. இது மட்டுமன்றி அம்பிகையின் நாமங்களில்

"கலைவாணி" "சஷ்டி" "கலாமயீ" என்பன அவள் அறுபத்துநான்கு கலைவடிவமானவள் என்பதைப் புலப்படுத்தி நிற்கின்றது. இந்துமத தத்துவ சாஸ்திர நூல்களில் ஒன்றான காமசூத்திரத்தில் முதன் முதலில் அறுபத்துநான்கு கலைகள் பற்றிப் பேசப்படு கின்றது. இவற்றைவிட காமசூத்திரத்தின் உரை நூலான "ஐயமங்கலை"யிலும், இராமாயணம் முதலான காப்பியங்களிலும், புத்தர் பயின்ற கலைகள் பற்றிக் கூறும் "லலிதவிஸ்திரத்திலும்" கலைகள் அறுபத்துநான்கு எனக் கூறப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் கலைகள் அறுபத்துநான்கு என்பதற்கு ஆதாரங்கள் உண்டு.

*"எண்ணெண் கலையுமிசைந்துடன் போக"*

என்னும் சிலப்பதிகார அடிகள் இங்கு கவனிக்கப்பட வேண்டியது. இவ்வாறு தமிழர்களுடைய பண்பாட்டிலும் கலைகள் அறுபத்துநான்கு என்றே கூறப்பட்டு வந்திருக்கின்றது.

தொன்குடி மாந்தராகிய பண்டைத்தமிழர்களிடையே பல கலைகள் காணப்பட்டு வந்திருக்கின்றன. எனவே கலைகள் எத்தனை என்ற ஆராட்சியில் இறங்குதல் கூடிய பலன் தராது. அதுமட்டும் அன்றி இது சந்தர்ப்பமும் அல்ல. கால நகர்வுகளுக்கு ஏற்ப கலைகளின் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்பட்டு இருக்கலாம் என்றே துணிய வேண்டும். இதுபோக, கற்பதற்கு உரியன எல்லாம் கலைகளா? அல்லது இவை இவைதான் கலைகள் எனக் கொள்ளத்தக்கனவா? என்பது பற்றிச் சிறிது நோக்குவோம்.

*"அகப்பை முதல் சிமிக்கி வரை*
*கைலேஞ்சி முதல் பூப்பாவடைவரை*
*அம்மி முதல் அம்மன்சிலைவரை.....*"

கலைக்குள் அடங்கும். ஆனால் கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம், இலக்கியம் என்ற எழுமே கலைகள் என்று போற்றப்படுவன. இவற்றுள் கவின்கலைகள் என்றும், நுண்கலைகள் (Fine Arts) என்றும் குறிப்பிடுவதுண்டு அழகு, உணர்ச்சி, கற்பனை இவைதான் கலைகளுக்குரிய பண்புகள் என்று பொதுவாகக் கூறப்படும். அப்படியாயின் அறுபத்து நான்கு கலைகளுக்குள்ளே சிலவாகக் கருதப்படும் சமையற்கலை, நெசவுக்கலை, தச்சுவேலைக் கலை இவற்றை எப்படிக் கலை என்பது? இவற்றிற்கு நுகர்ச்சி நயம் இன்மையால் இவற்றைக் கலைகள் இல்லை என்று ஒதுக்கிவிட முடியுமா? அப்படியாயின் இவற்றைக் கவின்கலைகள் அழகுக்கலைகள், நுண் கலைகள் எனப்பகுத்து நோக்குதலே சிறந்த வழியெனக் கருதுகின்றேன். மேற்படி சிக்கலிலிருந்து விடுபடவதற்கும் இதுவே வழியாகும். இன்னோர் வழியு முண்டு. கலைகள் என்றதும் எம்முன்னே தோன்றுவன கட்டடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் என்ற ஐந்துமே. எனவே, மேற்படி யாவற்றையும் இதற்குள் அடக்குவது சிறப்பாகும்.

திருமதி பவன்னீனா இளங்கோவன்
B.A (Hons)

## உங்கள் பொது அறிவு எப்படி

**1. பட்டு நெசவுக்கு உலகில் புகழ் பெற்ற நகரம் எது?**
**காஞ்சபுரம்**

**2. கோப்பிப் பயிர்ச்செய்கை முதலில் ஆரம் பித்த நாடு எது?**
**அபசீனியா**

**3. உலகில் மிகப்பெரிய தண்ணீர் ஏரி எது?**
**சுப்பீரியர் ஏரி**

**4. எந்த நாட்டின் தேசிய கீதம் உலகில் மிகப் பெரியது?**
**கிரேக்கம், கிரீஸ் - 128 வரிகள்**

**5. பெர்லின் சுவர் எப்போது கட்டப்பட்டது?**
**1961 ஆம் ஆண்டு**

**6. உலகில் பரப்பில் கூடிய நாடு எது?**
**இங்கிலாந்து**

**7. உலகில் மிகப்பெரிய வைரக்கல் எத்தனையாம் ஆண்டு கண்டு பிடிக்கப்பட்டது?**
**1905 ஆம் ஆண்டு**

**8. முதல் கணனி மொழியின் பெயர் என்ன?**
**பிளான் கால்கள்**

**9. ஒரே நாளில் அதிகரன் குவிதத வீரர் யார்?**
**டான் பிரட்மன்**

**10. பாரசீகக் கொள்கையின் சிற்பி என்று வர்ணிக்கப்பட்டவர் யார்?**
**முசோலினி**

**ஜெகனி – செ**

12 L 1

# செம்மையின் திருவடித்தலம்

## 1. கம்பராமாயணம் ஒரு அறிமுகம்.

உலக மகா காவியங்களில் ஒன்று கவிச்சக்கர வர்த்தி கம்பரால் இயற்றப்பட்ட கம்பராமாயணம். இதனை மகாகவி பாரதியும்

*'யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்*
*வள்ளுவர்போல் இளங்கோவைப்போல்*
*பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை*
*உண்மை வெறும் புகழ்ச்சியில்லை'*

என்று குறிப்பிட்டுள்ளான். எல்லா மதத்தவரும் போற்றும் இலக்கியம் இது. தமிழ்ப்பேரறிஞர்களாக விளங்கிய சைவப்பெரியார்களும் முஸ்லிம் பெரியார்களும் கிறிஸ்தவப் பெரியார்களும். இந்தக் காவியத்தின் பெருமையை எடுத்துக்கூறுவதையே தமது இலக்கியப் பணியாகக் கொண்டிருந்தார்கள். படிப்பறிவற்றவர்களும் கம்பன் பாடிய இராமாணயத்தைக் கேட்பதில் பெரு விருப்பமுடையவராயிருந்தனர். கம்பராமாணப் பிரசங்கிகள் இவர்களுடைய விருப்பை நிறைவேற்றப் பணிசெய்தார்கள்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கம்பராமாணம் சிறப்புப் பெற்றுள்ளது. விருத்தப்பாவின் சிறப்பை விளக்கும் நூலாக விளங்குகின்றது. தமிழ்ச்சொல் வளத்தின் ஆற்றலை நன்கு விளக்கும் நூல். அடுத்து செய்யுள் வளமுடையது. அபியுக்தர் என்பவர் கம்பராமாயணத்தின் செய்யுள் விகங்பங்களை

*"வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொன னூற்றாறே"*

என கணக்கிட்டுக் கூறியுள்ளார். கதை நிகழ்வுக் கேற்பவும், கதாபத்திரங்களின் குண இயல்புகளுக் கேற்பவும் செய்யுள்களைக் கம்பன் வேறுபடுத்தி அமைத்து இருப்பது அவனுடைய புலமைச் சிறப்புக் குச் சான்றாக உள்ளது. இங்கு எடுத்துக்காட்டாக இரு செய்யுட்களைக் குறிப்பிடலாம்.

தாடகை கோபக்கனலோடு இராமனை எதிர் கொள்ளும்போது -

*"இறைக்கடை துடித்தபுரு வந்தளெயி றென்னும்*
*பிறைக்கடை பிறக்கிட மடித்தபில வாயாள்*
*மறக்கடை யாத்திவட வைக்கன விலிறண்டாய்*
*நிறைக்கடல் முளைத்தன நெருப்பெழ*
*- விழித்தான்."*

(தாடகை வதை 49)

சூர்ப்பணகை இராமனை மயக்குவதற்காக எழிற் கோலத்தோடு வரும்போது,

*"பஞ்சி யொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்க*
*கெஞ்செவிய கஞ்சமிர் சீறடியளாகி*
*அஞ்சொலின மஞ்ஞையென அன்னமென மின்னும்*
*வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்."*

(சூர்ப்பணகை: 20)

உலாவியற்படலம், பூக்கொள்படலம், நீர் விளையாட்டுபடலம் போன்ற படலங்களில் கம்பனின் வருணனைச் சிறப்பையும் கவியாற்றலையும் காணலாம். ஒவ்வொரு செய்யுளும் ஒவ்வோர் ஓவியமாக அமைந்துள்ளது.

இரண்டு பாத்திரங்கள் சந்திக்கும் இடத்தில் கம்பன் வருணனைச் சிறப்புத் தனித்துவமானது. சில காட்சிகளை எடுத்துக்காட்டாகத் தரலாம்.

1. இராமனும் சீதையும் ஒருவரையொருவர் முதலிற் காணும் காட்சி.
2. இராமனை வேண்டி விசுவாமித்திரர் தசரதனிடம் கோபமாக வருகின்ற காட்சி.
3. குகன் பரதனை உணர்ந்தபின் தழுவி நிற்கும் அன்புக்காட்சி.
4. அனுமன் இராமன் முதலியோரை சுக்கிரீவ னுக்கு நட்பாக்கும் பக்திக்காட்சி.
5. விபீஷணன் இராமனிடம் சரண்புகும் சரணா கதிக் காட்சி.
6. கும்பகர்ணனும் விபீஷணனும் சந்திக்கும் சகோதரபாவக்காட்சி.
7. இராவணனும் இந்திரஜித்தும் இறுதியாகக் கண்டு போருக்குச் செல்லும் பிரியாவிடைக் காட்சி.
8. இராமன் சீதையின் கற்பை உலகத்தவர்க்கு உணர்த்தும் பரிசோதனைக்காட்சி.

கம்பராமாயணத்தில் பத்திரங்களின் குணவி யல்புகளை உணர்த்தும் தமிழ் மொழிநடையும் காவி யத்தை அணிசெய்கிறது.

கம்பன் பாடிய காவியத்தின் பெயர் 'இராம வதாரம்' என்றும் 'இராமகாதை' என்றும் கருத்துக் கூறப்படுகிறது. ஆனால் 'இராமாயணம்' என்றே நிலைத்துள்ளது. 6 கண்டங்களும், 113 படலங்களும் ஏறக்குறைய 10,500 பாடல்களும் கொண்டமைந்தது கம்பராமாயணம். இக்காவியத்தில் செருகு கவிதை களும் இணைந்திருப்பதாக அறிஞர் கூறுகின்றனர். இந்தக் காவியத்தை மிக நுணுக்கமாக ஆய்வு செய்த டி.கே.சிதம்பரநாதமுதலியார், சொ.முருகப்பா போன்றோர் இக்கருத்தை வெளியிட்டுள்ளனர் வ.வே.சு. ஐயரும் கம்பராமாயணத்தை நன்கு கற்று அதன் பெருமையை எல்லோரும் உணரவைத்தவராவார். செருகுகவிதைகளையும் உண்மைக் கவிதைகளை யும் வேறுபடுத்திக்காட்டும் அரிய இலக்கியப் பணியை மேற்கொண்டவராவார்.

## 2. கம்பர் வரலாறு பற்றிய செய்திகள்

கல்வியில் பெரியவர் கம்பர் என்பது பழ மொழி. கவிச்சக்கரவர்த்தி கம்பர் என்பது புகழ்மொழி. எனவே கம்பர் வரலாறு பற்றியறிய வேண்டியது காலத்தின் தேவையாகும். கம்பர் சோழநாட்டிலுள்ள திருவழுந் தூரில் வாழ்ந்தவர். அவருக்கும் சடையப்ப வள்ளலுக் கும் நெருங்கிய தொடர்புண்டு. இவர் உவச்சர் குலத் தில் ஆதித்தன் என்பவரின் புதல்வராகப் பிறந்தார். கம்பருக்கும் சோழ மன்னனின் அவைப் புலவராக விருந்த ஒட்டக்கூத்தருக்கும் இராமகாவியம் இயற்றுவ தில் போட்டி இருந்துள்ளது. ஒட்டக்கூத்தர் 4 கண்டங் களில் இராமன் கதையைப் பாடினார். கம்பர் 6 கண்டங்களில் பாடினார். கம்பர் பாடிய இராமன் கதை ஸ்ரீ ரங்கத்தில் அரங்கேற்றப்பட்டது.

பின்னர் கம்பருக்கும் சோழ மன்னனுக்குமி டையே வாக்குவாதம் ஏற்பட்டபோது மன்னனை விட் டுக்கம்பர் இலங்கைக்குச் சென்றதாகச் செய்தியுண்டு. இலங்கையிலும் பலதுன்பங்கள் ஏற்பட்டதால் மீண்டும் பாண்டிநாட்டுக்கு கப்பல் மூலம் சென்றார். சோழ மன்னன் அழைப்பின் பேரில் சோழநாடு சென்றபோது கம்பர் மகன் அம்பிகாபதியின் காதல் சிக்கலையும் இராமாயண காவியத்தில் பல இடைச்செருகல் செய் யுட்கள் புகுந்திருக்கும் நிலையையும் கம்பர் எதிர் கொள்ள நேர்ந்தது.

கம்பர் கொங்குநாடு, சேரநாடு போன்ற நாடுக ளுக்கும் சென்றுள்ளார். ஆந்திர நாட்டிலே பிரதாபருத் திரன் என்ற மன்னனின் அரண்தனையிலும் தங்கியி ருந்தார். வால்மீகியின் கதைப்போக்கை மாற்றியமை யால் மக்கள் கம்பரை வெறுத்தனர். பலர் கம்பர் தம்மீது பாடல் பாடவேண்டுமென விரும்பினர். கம்பர் அத்தகைய பாடல் ஒன்றுக்கு 'ஆயிரம் பொன்' என்று கட்டணம் வைத்தார். இதனால் 'காசுக்கம்பன்' என்ற பெயரையும் பெற்றார்.

கம்பர் வரலாறு பற்றிய செய்திகள் தமிழர் நாவலர் சரிதை, சோழ மண்டல சதகம், பாண்டிமண் டல சதகம், தொண்டை மண்டல சதகம், கொங்கு மண்டல சதக உரை, விநோதரமஞ்சரி, புலவர்புரா ணம், தனிப்பாடல் முதலியவற்றில் காணப்படுகின்றன. கம்பரின் பிறப்பும் பெயரும் பற்றிப் பல்வேறு செய்தி கள் காணப்படுகின்றன.

கோவிலில் கொடிகட்டும் கம்பத்தின் அடியில் கிடந்த குழந்தையை கோவிலில் சங்கு ஊதும் உவச்சர் எடுத்து வளர்த்தபோது அங்குழந்தைக்குக்

கம்பன் எனப் பெயரிட்டதாக புலவர் புராணம் கூறுகிறது. இதைவிடக் கம்பங் கொல்லையைக் காத்தமையால் கம்பர் எனப் பெயர் பெற்றதாகவும் கம்பநாடு என்ற நாட்டை உடையவராதலால் கம்பன் என்ற பெயர் ஏற்பட்டதென்றும் 'ஏகம்பன்' என்ற பெயரில் முதல் எழுத்துக்குறைந்து கம்பன் ஆனதாகவும் பல விதமான செய்திகள் உள. இலங்கையின் வடபாகத்தே உள்ள 'கம்பர்மலை' என்ற பெயருக்கும் கம்பர் வரலாற்றுக்கும் ஏதாவது தொடர்பு இருக்குமோ என்று ஐயமும் இவ்விடத்துத் தோன்றுகிறது. கம்பர் என்ற பெயருடன் சோழன் ஒருவரும் இருந்தமை அறியப்படுகிறது. திருக்கோவலூர் சாசனத்தில் இரண்டு குறிப்புகள் உண்டு. "வீதிவிடங்கன் கம்பன் ஆயிலியன் மான் சோழன் அதிகாரிகள்..." என்றும் "காவலான் வாழ்கம்பன்" என்றும் காணப்படுகின்றன.

கம்பர் வழ்ந்த காலம் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு எனக் கூறப்படுகிறது. அதற்கு ஆதாரமாகப் பின்வரும் பாடல் சுட்டப்படுகிறது.

*"எண்ணிய சகாந்தம் சடையன் வாழ்வு*
*எழின்மேல் சடையன் வாழ்வு*
*நண்ணிய வெண்ணெய் நல்லூர்*
*தன்னிலே கம்பநாடன்*
*பண்ணிய ராம கதை*
*பங்குனி உத்தரத்தில்*
*கண்ணிய அரங்கர் முன்னே*
*கவியரங்கேற்றினானே."*

இந்த தகவல் உண்மையல்ல எனச் சிலர் மறுப்பர். அவர்கள் சான்றாக சுட்டும் பாடல் வருமாறு:

*"ஆவின் தொடைச் சகரர் ஆயிரத்து நூறொழித்து*
*தேவன் திருவழுந்தூர் நன்னாட்டு மூவலூர்ச்*
*சீரார் குணாதித்தன் சேய் அமையப் பாடினான்*
*தாரார் காகுத்தன் கதை."*

9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வார் பாசுரம் ஒன்றின் கருத்தும் சொல்லும் கம் பராமாயணத்தில் அமைந்திருப்பதையும் திருமழிசை யாழ்வார், நம்மாழ்வார் போன்ற ஆழ்வார் பாசுரச் செய்தியும் கம்பராமாயணத்தில் காணப்படுவதால் கம்பர் இந்த ஆழ்வார்களுக்குப் பிற்பட்டவர் என்றும் கருத்து உண்டு. கம்பர் காலம் பற்றிய ஆய்வுகள் மேலும் நடைபெறவேண்டும் என்பது பலரது கருத்து. அதுவரை மேற்காட்டிய பாடல்களால் கம்பர் வாழ்ந்த காலம் அவரவர் மனநிலைக் கேற்பவே குறிப்பிடப்படும். எதிர்காலத்தில் ஆய்வாளர்கள் கம்பர் வாழ்ந்த காலத்தைத் தெளிவுபடுத்தக் கூடும்.

### 3. திருவடி சூட்டுபடலம்

வடமொழியிலே வான்மீகி இயற்றிய காவியம் ஏழு கண்டங்களாக அமைந்திருப்பது இரான் கதையை பின்வரும் தொடர்பாடல் நிலையில் வான்மீகி பாடினார்.

1. பாலகாண்டம்: இராமனின் பாலபருவம் பற்றிக் கூறுவது.
2. அயோத்தியாகாண்டம்: அயோத்தியில் நடந்த சிக்கல் பற்றிக் கூறுவது.
3. ஆரணிய காண்டம்: இராமன், சீதையின், காட்டு வாழ்வு பற்றிக் கூறுவது.
4. கிட்கிந்தா காண்டம்: கிட்கிந்தையில் நிகழ்ந்தவற்றைக் கூறுவது.
5. சுந்தரகாண்டம்: சுந்தரனான அநுமன் பற்றிக் கூறுவது.
6. யுத்தகாண்டம்: இராம இராவண யுத்தம் பற்றிக் கூறுவது.
7. உத்தரகாண்டம்: பிற செய்திகளைக் கூறுவது.

கம்பர் வான்மீகி இராமயணத்தைத் தழுவியே தமிழில் இராம காதையைப் பாடினார். ஆறுகாண்டங் களை மட்டும் பாடினார். இரண்டாவது காண்டமாகிய அயோத்தியா காண்டத்தில் 13 படலங் களை அமைத் துள்ளார். அவற்றில் இறுதியாக அமைந்த படலமே 'திருவடிசூட்டுபடலம்' ஆகும். இப்படலம் இராமன் கதையில் மிக முக்கியமான படலமாகும்.

தந்தையின் கட்டளைப்படி காடாள வந்த இராமன் மன உறுதியை இப்படலம் விளக்குகிறது. மனிதக் குணங்களுக்கே இயல்பான உணர்வுகளால் இராமன் தாக்கப்பட்டாலும் உறுதி குலையாமல் இருப்பதை உணர்த்துகிறது. இராமன் - பரதன் -

இலக்கு வன் என்னும் மூவரின் உறவு நிலையும் உணர்வு நிலையும் நன்கு துலக்கப்பட்டுள்ளன. இளமையும், முதுமையும் தொடர்பாடல்நிலையில் சிக்கலைத் தீர்த் துக்கொள்ளும் மனப் பக்குவநிலை எடுத்துரைக்கப்பட் டுள்ளது.

பரதனும் பரத்துவாசமுனிவரும் இராமன் மீண்டுவந்து நாடாள வேண்டுமென எண்ணிச் செயற் படுகின்றனர். மூத்தவனுக்கே அரசாட்சியுரிமை என்ப தைப் பேண விழைகின்றனர். அதற்காகவே தவக் கோலம் பூண்டு பரதன் வருகிறான். இராமன் நாடாள ஒப்பவில்லையென்றால் தானும் காட்டு வாழ்வை மேற்கொள்ள முடிவு செய்தான். மூத்தவன் இருக்க இளையவன் ஆட்சிபொறுப்பை ஏற்பது அறமன்று என்ற பரதனின் நினைப்பு பரத்துவாச முனிவனை மகிழ்விக்கின்றது. அறம் பிழைக்கப் பணியாற்றும் பரதனின் இளமையாற்றல் நல்வழிச் செல்வது கண்டு மனம் நிறைந்தான். அதனால் பரதனுக்கும் படை யினர்க்கும் விருந்தோம்புகிறான்.

முனிவரின் விருந்தோம்பல் முறையை 10 பாடல்களில் கம்பன் காட்சிப்படுத்தியுள்ளான்.

1. விருந்தினர் மகிழ்ச்சிநிலை
2. இருப்பிடம் அளித்தல்
3. நீராட ஆடை அளித்தல்
4. இன்னமுதூட்டல்
5. துஞ்சப்பண்ணுதல்
6. பணியாளர் கடன்நிலை
7. ஏனைய உடன்வந்த விலங்குகளுக்கு உணவூட் டல்.

எனினும் பரதன்மட்டும் ஏனைவர்களோடு சேர்ந்து மகிழாமல் வேறுபட்டு காயும் கிழங்கும் உண்கிறான். இங்கே கம்பர் அவன் தரித்த தவக் கோலத்திற்கு இயைந்த உணவு உண்பதைச் சுட்டி மரபான நடை முறையை விளக்கியுள்ளார்.

பரதனது வருகை இலக்குவன் உள்ளத்தில் வேறுபட்ட உணர்வை ஏற்படுத்தியது. சீற்றத்துடன் பரதன் வருகையை அறிவிக்கும் இலக்குவன் பரதன் மனநிலை உணராதவனாயிருக்கிறான். அவன் உணர்வைப் 13 பாடல்களில் கம்பர் காட்டுகிறார். கைகேயினி புதல்வனாக பரதனை இலக்குவன் பார்க் கிறான். அன்பு நிலையில் பரதனை அவன் அணுக வில்லை. எதிர்ப்போடு பார்க்கிறான். மூத்தவனான இராமன் இளவலான இலக்குவனை இவ்விடத்தில் நெறிப்படுத்துகிறான். இராமன் அறிவுரைகளை கம்பர் 6 பாடல்களில் அமைந்துள்ளனர். அவலத்தின் உரு வாக வரும் பரதனின் தோற்றத்தை நேரே காணும் போது இலக்குவன் தன் பிழையை முழுமையாக உணர்கிறான். சகோதரர்கள் சந்திப்பு கம்பன் பாடிய இராம காதையில் ஒரு திருப்புமுனை. அயோத்தியில் தசரதன் கட்டளையை ஏற்றுக்காடேகும்போது ஒரு வரோடொருவர் கலந்துரையாடவில்லை. ஆனால் இப்போது கட்டளையிட தந்தையின் பிரிவை பரதன் கூறியபோது இராமனும் இலக்குவனும் சோகத்தில் ஆழ்கின்றனர். தந்தையின் இறப்புக்கான காரணம் இராமன் பிரிவே என்பதை உணர்ந்தவன் பரதன். காடாள வந்த இராமன் தந்தையை மீண்டும் காண லாம் என்னும் நினைவைச் சுமந்து வருகிறான். ஆனால் பொய்யாகிப் போனதைப் பரதன் உணர்த்துகிறான். இராமன் தந்தையின் சொல்காத்தபோதும் உயிரைக் காக்க முடியவில்லையே எனக் கலங்குகிறான். திருவடி சூட்டுபடலத்தில் இராமனின் தீராத சோகம் மனித நிலையில் அவன்புலம்பும் காட்சி, பின்னர் தோன்றும் நிலை உனக் கம்பர் காட்டும் சொல்லோ வியங்கள் இராமன் மெய்வநிலையில் இருந்து மானு டனாகி நிற்பதை நன்குணர்த்துகின்றன.

இராமன் தந்தையின் சிறப்பைப் புலம்பல் மூலம் தம்பியர்க்கு உணர்த்துகின்றான். அவனை வசிட்டர் தோற்றுகிறார். அதன் பின்னரே இராமன் தன்னிலை உணர்ந்து தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்கிறான். இராமன் செய்த நீர்க்கடன் முறைமை யைக் கம்பன் தனியொரு பாடலில் கூறுகிறான்.

*"புக்கனன் புனலிடை முழுகிப் போந்தனன்*
*தக்கநல் மறையவன் சடங்கு காட்டத்தான்*
*முக்கையின் நீர் விதி முறையின் ஈந்தனன்*
*ஒக்கநின்று உயிர்தொரு உணர்வு நல்குவான்."*

திருவடிசூட்டும் படலத்தில் இராமன் தன் உறவு களை மீண்டும் காணுகின்றான். தந்தையின் மறை வால் ஏற்பட்ட சோகத்தைப் பகிர்ந்து கொள்கிறான்.

எல்லோரும் தசரதன் இறந்தமையால் இராமன் திரும்பிவந்து நாடாள வேண்டுமென விரும்புகின்றனர். பரதனுடைய தவவேடம் இராமனுக்கு அவனுடைய எண்ணத்தைத் தெளிவாக உணர்த்திவிட்டது. எனவே பரதனுடைய கடனை நினைவூட்டுகிறான். "தந்தை மறைந்தமையால் நாடாளும் பணியை ஏற்க வேண்டிய நீ எதற்காக இவ்வேடம் பூண்டாய்" என்று வினாவுகிறான். ஆனால், பரதனோ தன்னுடைய பழி நிலை பற்றியே இராமனுக்குக் கூறுகிறான். பொதுவான அரச உரிமைநிலைமை எடுத்துக்கூறி தந்தையின் இடத்தை ஏற்கும்படி வேண்டுகிறான். அவனுக்கு இராமன் அறத்தைப் புகட்டுகிறான். தந்தையின் சொல் லைக் காக்கவேண்டியதே அறமென்பதை விளக்கு கிறான். பரதனுக்கும் இராமனுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை இவ்விடத்தில் கம்பன் வெகு நுணுக்க மாகக் காட்டியுள்ளான். சொல்லறம் காப்பதே கடன் என்பதை உணர்த்தி "தந்தை சொல்மிக்க மந்திர மில்லை" என்ற முதுமொழியைப் பேணுகிறான். வசிட் டன் வாய்மொழியாக அதை எல்லோரும் ஏற்கச் செய்கிறான். இராமன் சொல்லறம் காக்கும் குண நலனை வசிட்டர் உணரும் பாங்கையும் இப்படலம் விளக்கியுள்ளது.

பரதனின் குண இயல்பு இப்படலத்தில் திறம் படக் கம்பனால் காட்டப்பட்டுள்ளது. 14 ஆண்டுகள் பழியோடு நாடாளும் பரதன் தாயின் சொல்லைக் காக்க தந்தையின் வரத்தை நிறைவேற்ற இராமனின் கட்டளையை ஏற்கிறான். அவன் உள்ளம் பழியை ஏற்றும் பணி செய்யும் பக்குவம் பெற்றது கைகேயின் கூற்றை நினைவில் சுமந்து வாழ முனைகிறான்.

*"வாக்கினால் வரம் தரக் கொண்டு மைந்தனைப்*
*போக்கினேன் வனத்திடை போக்கி பார் உனக்கு*
*ஆக்கினேன் அவன் பொறுக்கலாமையால்*
*நீக்கினான் தன் உயிர் நேமி வேந்து என்றாள்."*

எல்லோருக்கும் மனநிம்மதியைத்தர விழைகின்றான். அதேவேளை நீண்ட 14 ஆண்டுகளில் மக்களை இராமனை நினைத்துவாழ ஒரு முடிவுசெய்கிறான். இராமனுடைய திருவடித் தலத்தையே முடித்தலம் ஆக்குகிறான். 'திருவடி சூட்டுபடலம்' என்ற பெயர் கம்பராமாயணத்தில் இடம்பெற பரதனே படலப் பெயரை மொழிபவனாக விளக்குகிறான். கம்பன் அதனை அழகிய செல்லோவியமாக்கியுள்ளான்.

*"அடித்தலம் இரண்டையும் அழுதகண்ணினான்*
*முடித்தலம் இவை என முறையின் சூடினான்..."*

பரதனைத் தொடர்ந்து எல்லோரும் அயோத்தி செல்கிறார்கள். எண்ணில், சுற்றம், சான்றவர்குழு, தவத்துள்ளோர், வான்தருசேனை, முனிவர், மாந்தர், தேவர் எல்லோரும் தத்தம் கடமையைச் செய்யப் போகிறார்கள். இக்காட்சி இராமாயணக் கதையில் ஒரு திருப்புமையம். கதை தொடர இராமன் இலக்குவனும் சீதையுடனும் தென்திசை நோக்கிப் போகிறான். பரதன் அயோத்தியை நோக்கிப் போகிறான்.

நாடாள்தல், காடாள்தல் என்ற இருவேறு பணியை ஏற்ற எரதனும் இராமனும் நாட்டு மக்கள் மனதில் சொல்லறம் நிலைக்கச் செயற்படுகின்றனர். சீதையும் இலக்குவனும் உறவுநிலையில் இராமனுடன் உடன்உள்ளனர். பரதனுக்கு ஏனைய உறவுகள் அனைத்தும் உடன் உள்ளனர். அயோத்தி இராமன் அரசாளவேண்டிய இடம். எனவே பரதன் நாடாளும் பொறுப்பைச் சுமக்க நேர்ந்தபோது இராமனின் பாதுகையை அரியணையில் வைத்து நந்திக் கிராமத்தில் ஆட்சி செய்கிறான். இராமன் உடனில்லா விட்டலும் அவன் பாதுகையை வழிபட்டு வாழும் வாழ்வியல் பரதன் காட்டிய பாதுகையைச் சிறப்பித்த பரதன் உயர்ந்த குணம் போற்றுதற்குரியது. பெருமையுடை வழிபாடு நடைமுறைப்படுத்தப் பரதன் தொடக்கி வைக்கிறான்.

திருவடி சூட்டுபடலத்தில் மூன்று உடன்பிறப்புக்களின் குண இயல்புகளைக் கம்பர் ஒருசேரக் காட்டுகிறார். மூவரும் தசரதன் புதல்வர்கள். ஆனால் மூன்று தாய்மார் வயிற்றில் பிறந்தவர்கள். பரதன் இராமனைத் தேடி சித்திர கூடத்திற்கு வந்தபோது இலக்குவன் அவனைத்தவறாக மதிப்பிட்டு அவன் மேல் சீற்றம் கொள்கிறான். போர்க்கோலம் கொள்கிறான். காடாளவந்த தவக்கோலத்தை மறந்துவிட்டான். எடுத்ததற்கெல்லாம் சீறிப்பாய்ந்து சினம் கொள்வதே இலக்குவன் இயல்பு இங்கும் அவன் வருகையைத் தவறாக மதிப்பிட்டதைக் கம்பர் காட்டுகிறார். இராமன் காடாள்வதற்குப் பரதனே காரணம் என்ற எண்ணம் இலக்குவன் உள்ளத்தை நிறைத்திருந்தது. பரத னைப் பிரிந்து கைகேகியும் வருந்த வேண்டும் என நினைக்கிறான்.

ஆனால், பரதன் இராமன் மீது பக்தி கெ்ண்ட வனாயுள்ளான். இராமன் காடாளப் புறப்பட்டபோது பரதன் அயோத்தியில் இல்லை. அதனால் இராமனை நேரில் கண்டு பேசும் வாய்ப்பும் கிடைக்கவில்லை. அவன் கேகய நாட்டிலிருந்து வந்தவுடன் ஆட்சிப் பொறுப்பை இராமனிடமே ஒப்படைக்க விரும்புகிறான். இலக்குவன் பரதனின் பண்புநிலை உணராதவன் என்பதைக் கம்பர் சிறப்பாகக் காட்டியுள்ளார். இராமன் மீது அன்பு கொண்டிருந்த இலக்குவன் பரதனும் அத்தகைய பேரன்பு கொண்டிருந்தான் என்பதை உணரத் தவறிவிட்டான். அதையே திருவடி சூட்டுபட லத்தில் பரதன் நன்கு உணர்த்துகிறான். பரதன் இரா மன் மீது கொண்ட அன்புநிலையை இலக்குவன் உணராதிருப்பதை "என்னொடும் பொரும் என இயம்பற் பாலதோ", என்ற இராமன் வினாவெளிப்படுத்துகிறது.

இராமன் உலகியல் முறைமையைத் தம்பியர் இருவருக்கும் தெளிவாக எடுத்து இயம்புகிறான். மூத்தவன் என்ற நிலையில் இராமனின் வழிகாட்டல் இளைவர்களுக்கு இன்றியமையாதது. சீற்றம் கொண்ட இலக்குவனையும் தாயின் செயலால் அவ லப்படும் பரதனையும் இராமன் நெறிப்படுத்துகிறான். தந்தையின் மறைவால்தான் அநுபவிக்கும் சோக த்தை மனத்துள் அடக்கித் தம்பியரை வழிநடத்து கிறான். தசரதன் கொடுத்தவரம் அவன் இறப்பினால் கழிந்துவிட்டது என எல்லோரும் எண்ணுகையில் இராமன் தசரதன் இறந்த பின்பும் அவன் சொல்காப் பது மைந்தர் கடன் என விளக்குகிறான். தசரதன் கொடுத்தவரம் வாய்மையுடையது. பரதன் உலகியல் நிலையை உணர்ந்த ராமன் "நடப்பவை எல்லாம் மனிதச் செயற்பாடுகள் அல்ல எல்லாம் இறைவன் ஏவலால் நடப்பவை" எனத் தேற்றுகிறான். தந்தை யின் சொல்தாக்கத் தலைப்பட்ட இராமனும் பரதனும் தத்தம் கடமையை எற்றபோது இலக்குவன் யாரு டைய சொல்லறம் பேணக்காடுவந்தான்? என்ற வினா எழும்புகிறது. இராமனோடு காடாள்கிறான். பரதனுக் குத் துணையாகச் சத்துருக்கன் பணி செய்கிறான்.

திருவடித்தவம் ஒன்றை பரதன் வழிபாட்டு நெறி யிலே காட்டுகின்ற மரபு கம்பனால் தொடக்கிவைக் கப்படுகிறது. இராமனின் உள்ளத்தின் செம்மையை பரதன் உணர்ந்துகொண்டபோது அந்த உருவைத் தாக்கி நிற்கும் பாதுகையை வழிபடுகிறான். வில்லறம் காக்கும் வீரன் இராமன் சொல்லறம் காக்கும் பணி யில் நின்றபோது கற்பின் நிறம் காட்டும் கடவுளாகப் பரதனுக்குக் காட்சி தருகிறான். கற்றபடி வாழும் கற்பு நெறியை இராமன் உடன்பிறப்புகளுக்கு உணர்த் துவதன் மூலம் உலகுக்கு உணாத்துவதாகக் கம்பர் காட்டியுள்ளார். அரச வாழ்வைத் துறப்பதற்கு ஒரு மனநிலை வேண்டும். உரிமையுள்ளபோதும் அதை இழக்கும் நிலை ஏற்படலாம். மனித முடிவுகள் சிலவேளை தலைகீழாய் மாறிப்போகலாம். ஆனால் அதைச் சமப்படுத்த ஒரு அறிவுநிலை வேண்டும். ஒரு நாடே கலங்கி நிற்கையில் அதனை அமைதிப் படுத்தும் பணியை இராமன் ஏற்கிறான். தந்தை சொற்காப்பதே மைந்தர் கடன். அரசன் சொற்படி நடப்பதே மக்கள் கடன் என்பதை திருவடி சூட்டு படலம் தெளிவாக விளக்கியுள்ளது.

செம்மையின் திருவடி ஆட்சிசெய்த சிறப்புப் பெற்ற தலமாக நந்திக்கிராமம் விளக்குகிறது. 14 ஆண்டுகள் தசரதனின் வாய்மை காத்துப் பரதன் நாடாள்கிறான். இராமன் காடாள்கிறான். இருவரும் ஐம்பொறிகளின் ஆசை துறந்து சொல்லறம் காத்த தூய வீரர்களாக இருக்கிறார்கள். அந்தியும் பகரும் நீர் அறாத கண்ணோடு பரதன் பாதுகை வழிபட்டுச் செயற்பட்டான். அயோத்தியின் சிறப்பை அதன் ஆட்சிப் பெருமையைக் கம்பன் திருவடி சூட்டு படலத்தில் தெளிவாகப் பதிவு செய்துள்ளான். மனித வாழ்வில் எதிர்கொள்ளும் அவலங்களையும், சிக்கல் களையும், துன்பங்களையும், துயர்களையும், இடர் களையும், துன்பங்களையும் வெல்வதற்கு வழிபாடே சிறந்தது என்ற உண்மையை யாவரும் உணரவைக் கிறான். மூத்தோர் வழிநடப்பதே நம் வாழ்க்கையின் சிறந்த செல்நெறி என்பதை உணர்த்தும் படலமாக திருவடி சூட்டுபடலம் சிறப்புடன் அமைக்கப்பட்டுள் ளது. இறைவன் தாள்களைப் பணிந்து வழிபடும் மரபு தொடரக் கம்பன் காவியம் இயற்றியதற்கு இப்படல மும் நல்ல சான்றாக உள்ளது எனில் மிகையாகாது.

– கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

# வெற்றிக்கு இல்லை எல்லை

நீ தொட்டு விட்டது
சிகரங்களை யல்ல...
சிலித்துப் போவதற்கு!
சிகரம் தான் எல்லையுமில்லை வெற்றிக்கு
நிமிர்ந்து பார்...
சிகரத்திற்கு மேலேயும்
தெரிகிறது வானம்
தொலை தூரமாய்!
அதன் அகலத்தை மதிப்பிடு
தூரத்தை அளந்து பார்!
முடியவில்லை யென்று
முகாரியிட்டு அழாதே!
முயற்சி செய்!

நேற்றைய பரீட்சையில்
தோற்றுப் போனதற்காய்
துவண்டு அழும் மனிதா!
இருட்டுக் குள்ளிருந்து வெளியே வா...
பரீட்சை தான் வெற்றியின்
எல்லை யென்று
எவர் சொன்னார் உனக்கு
வெற்றிக்கு இல்லை எல்லை!

கல்லாய் போன கடவுளென்று
சபித்துக கொண்டிருந்த
உன் வாய்களுக்கு பூட்டிடு!
எல்லாம் விதியென்ற
பழைய பல்லவியை உடைத்தெறி!
தடைக் கல்லை உடைத்து
வெற்றியின் முதற் படியில்
காலையிடு!
முயற்சித் தூணை இறுகப்
பற்றிக் கொள்
எப்போதும் சிகரங்களை நோக்கியதாய்
இருக்கட்டும் உன் பார்வை...
ஒரு நிமிடம்!

சிகரம் தான் வெற்றிக்கு இல்லை எல்லை
வானமாய், கடலாய்
தொலை தூரமாய், முடிவிலியாய்
விரிந்து செல்கிறது வெற்றி
வெற்றிக்கு இல்லை எல்லை!

**சண்முகராசினி**
கலைப்பிரிவு 12 E II

# தமிழ் அன்னை

தானீன்ற மகனை பார் போற்ற வைப்பதற்கு
தனிநீராம் தமிழ்ப் பாலை கலந்து தந்து
தளிர்க்க வைத்த தன்னிகரில்லா அன்னையாம்
தரணியே போற்றும் தமிழ் அன்னை.

தன் குழந்தை ஒழுக்கமுற வாழ்வதற்கு
தயவு காட்டி பொய், களவு போன்ற
குரோதங்களை செய்யாமல் வழிப்படுத்திய
குமரியம்மா தமிழ் அன்னை.

உலகிலுள்ள மொழிகளிலே ஆதி மொழியாகி
உலகத்து செய்திகளை உள்ளடக்கியும் எண்ணில் அடங்கா
உலகப் பொது மறைகளையும் பக்தி பாடல்களையும்கொண்ட
உருசியான பக்தி சுவையை சமைத்த அன்னை அம்மா.

மானிடப் பெண்களுக்கு நடையழகை வர்ணிப்பதைவிட
மாமகளாம் நீ செய்யுள் நடை உரைநடை
மங்காத வசன நடை கொண்டு
மாறுபடாத வீறு நடை போடும் அன்னை நீ.

பாரிய இன்னல்களை சந்தித்த போதும்
பாறி வீழாமல் பயந்து நெகிழாமல்
பரந்தளவு வாழ்கிறியே நீதான்
பாரிலுள்ள பெண்களுக் கெல்லாம் தலைவி.

மொழிகளுக் கெல்லாம் அன்னையாகிய
மௌனமாக மக்கள் மத்தியில் வாழும்
மௌன கீதமே எங்கள் குல விளக்கே
நீதான் ஆரிய இனத்தவரின் அன்னை.

**இ.மீராஜினி**
கலைப்பிரிவு
2006 L 2

# எஸ்.சிவன் கடை

பல்பொருள் வாணிபம்


Hardware, electret, Light வகை,

சீமெந்து *Item* , கூரைத்தகடுகள், *Paint*


மாபிள் வகைகள், எலற்றிக் பாட்ஸ்

நீளயியி றூழிவிவி, வயாகன உதிரிப்பாகங்கள்

போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.




## *S. Sivan Stores*



கே.கே.எஸ். வீதி,

கோண்டாவில் மேற்கு.

தொ.பே.: 2225900

*K.K.S. Road,*

*Kondavil West.*

# சிவா பிறதர்ஸ்

# SIVA BROTHERS

கட்டடப்பொருள், வர்ணப்பூச்சுக்கள், சீமெந்து,
கூரைத் தகடுகள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்

*Prop: N.Sivananthan*




*Palaly Road,*
*Kondavil.*

T.P.: 5116

# தயேந்தினி பல்பொருள் வாணிபம்

## & வெற்றிலைக்கடை



சகல பிஸ்கட் வகைகள், பெட்டியில்
அடைக்கப்பட்ட கேக் வகைகள்,
சகல வகை சோடாக்கள், பால்மா வகைகள்,
வெற்றிலை, வாசவெற்றிலை, ஸ்பெசல்
வெற்றிலை, மங்கள காரியங்களுக்கான
பழங்கள் , பட்டு,ஊதுபத்திகள், கற்பூரம்
போன்றவற்றை ஒரே
இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கொக்குவில் சந்தி,
கொக்குவில்

# கணேசன் கொமினிகேசன்

கொம்பியூட்டர் ரைப்பிங், Net 2 Phone,
இன்ரநெற் சேவை, போட்டோகொப்பி,
கவரிடுதல், வாழ்த்து மடல்கள்,
பாடசாலை உபகரணங்கள்
போன்றவற்றைப் பெற நீங்கள்
நாடவேண்டிய ஒரே இடம்.



கணேசன் கொமினிகேசன்

T.P.: 021 2222585
0212223423
021 2225891


கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.

# பரணி கிறீம் ஹவுஸ்

கே.கே.எஸ். வீதி, கொக்குவில்.



பல வகையான ஐஸ்கிறீம்,
சுவைமிகு சோட்டீஸ், போன்றவற்றை
பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய குளிரகம்
(ஓடர்களும் ஏற்றுக்கொள்ளப்படும்)




# PARANI CREAM HOUSE

K.K.S. Road,
Kokuwil Junction,
Kokuwil

T.P.: 077 6701527



சாருஜன் கொம்மினிகேசன்
&
துர்க்கா சேவிஸ் ஸ்ரேசன்
பைண்டிங், Net 2 Phone, கவர்டுதல்,
போட்டோக்கொப்பி குளிர்பான வகைகள்
பேன்றவற்றைப் பெற்றுக்கொள்ளவும்
மற்றும் மோட்டார் சைக்கிள்,
ஆட்டோ போன்ற வாகனங்கள்
புதுப்பொலிவுடன்
சேவிஸ் செய்து தரப்படும்
வான்சேவை
021 2222961
021 2223200
021 2226127
கே.கே.எஸ். றோட்,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்
K.K.S. Road,
KoKuvil.
ஸ்ரீ முருகன் வெதுப்பகம்
நவீன இயந்திர முறையில்
தயாரிக்கப்பட்ட பாண், பட்டர்ப்பாண்,
சகல வகை பணிஸ்
கேக் வகைகள் போன்றவற்றை
பெற்றுக்கொள்ளளாம்.
Cake Baking செய்து தரப்படும்.
ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
செந்தூரன்
எலற்றிக்கல்ஸ்
சகல மின்சாதன உதிரிப்பாகங்கள்
பலவகை மின்குமிழ்கள்,
மின்சாதனப்பொருட்கள்
வாகன உதிரிப்பாகங்கள்
Paint வகைகள்
போன்றவற்றை ஒரே இடத்தில்
பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி.
ஸ்ரீ லக்ஷ்மி ரேடர்ஸ்
பல்பொருள் களஞ்சியம்
பலசரக்குப் பொருட்களை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி.
T.P. - 021 2222928




இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்தகாலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்து அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவை, 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

IBM, Microsoft, Sun Micro Systems, Cisco, Compaq, AT & T Labs, Intel மற்றும் HP நிறுவனங்களின் இணைத் தயாரிப்பு நிறுவனங்களில் நேரடியாக இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை புகுத்தும் நோக்கத்துடன் இந்நிறுவனத்தை நிறுவியுள்ளோம். கணனி துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி விற்பனை, பழுது நீக்குதல், வலைப்பின்னலமைப்பை ஏற்படுத்துதல், மென்பொருள் உற்பத்தி ஆகியவற்றை இலங்கையில் எங்கும் இல்லாதவாறு வழங்குகின்றோம்.

**சகல கணனி உதிரிகளும்**
**கொழும்பை ஒத்த விலையில்**

**3 வருட முழு உத்தரவாதம்**

**Spot**
**Mobile Service**
**Call: 021-4590720**
**0773134737**

Latest கணனிகள் (3 வருட முழு உத்தரவாதம்) மற்றும் உதிரிகளும் கொழும்பை ஒத்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.


**இது எங்கள்**
**மொபைல் சர்வீஸ்**
**ரீமுடன்**
**இணைக்கப்பட்டது.**

# UNIT

347, K.K.S. Road, Manohara Theatre Junction, Jaffna.
T.P: 021- 4590720 / 0773134737 / 0776093477

# SARAGAS'S CENTER

Dealers of Blenders and spare parts, Charger Lights, non - stick kitchen Wares, fan, toaster, Kettle, Electric Owen, ricecooker, Gift items.



789, K.K.S. Road,
Sivalingappuliady,
Jaffna,
Sri Lanka.

Reg.No.: NAL/DS/464

# V.M.K Brothers

அனைத்து கட்டடப் பொருட்களையும்
ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய இடம்

## வீ.எம்.கே. பிறதர்ஸ்

Palaly Road,
Kondavi Junction,
Kondavil.

T.P.: 0773288750
0777 610044

# பூபாலசிங்கம் புத்தகசாலை

பாலர் வகுப்பு முதல் பட்டதாரி வகுப்பு வரையான

சகல பாடப்புத்தகங்களும், பாடசாலை உபகரணங்களுக்கும்


யாழ்.நகர மத்தியில் நாடவேண்டிய நூலகம்

## பூபாலசிங்கம் புத்தகசாலை

தொலைபேசி: 6693
7962

இல.04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

PC PARADISE



அனைத்து விதமான கணனிகள் கணனி உதிரிப்பாகங்களையும்
யாழ் நகரிலே மிகக் குறைந்த விலையில் உத்தரவாதத்துடன்
பெற்றுக்கொள்ளக் கூடிய ஒரே ஒரு நிறுவனம்

# PC Paradise

61, Clock Tower Road,
Jaffna, Sri Lanka.

☎ : 021 - 2222831
H/P : 0777 - 271220

# C.B COMPUTER ACADEMY

STATION Road , Kondavil. Jaffna. T.P : 021- 4590291

## C.B நிறுவகத்தின் திறப்பு விழா நிகழ்வு

Photo - 1



Photo - 2



Photo - 3



Photo - 4



| Se No | Course's | Course Fees | Disscount 50% | Duration |
|---|---|---|---|---|
| 01 | Diploma in M.S Office | 3000 /- | 1500 /- | 3 Months |
| 02 | Diploma in D. T. P | 3000 /- | 1500 /- | 3 Months |
| 03 | Diploma in Hardware | 3000 /- | 1500 /- | 3 Months |
| 04 | Diploma in Web Design | 4000/- | 2000 /- | 3 Months |
| 05 | A/L GIT Program | 40 /- (Per hours) | 20 /- | -------------- |

SPECIAL OFFER
SCHOOL STUDENTS

| Levels | Age Level | Duration (Hours) 03 Months | Monthly Fees |
|---|---|---|---|
| Level - 1 | 7 to 8 | 2hrs x 2 days Per week | Rs. 500 /- |
| Level - 2 | 9 + | 2hrs x 2 days Per week | Rs. 500 /- |
| Level - 3 | 10 + | 2hrs x 2 days Per week | Rs. 500 /- |
| Level - 4 | 11 + | 2hrs x 2 days Per week | Rs. 500 /- |
| Level - 5 | 12 + | 2hrs x 2 days Per week | Rs. 500 /- |
| Level - 6 | 13 + | 2hrs x 2 days Per week | Rs. 500 /- |
| Level - 7 | 14 + | 2hrs x 2 days Per week | Rs. 500 /- |
| Level - 8 | 15 + | 2hrs x 2 days Per week | Rs. 500 /- |

- எமது நிறுவனம் தான் புதியது ஆனால், எமது விரிவுரையாளர்கள் புதியவர்கள் அல்லர்.அவர்கள் பல வருடங்களாகக் கணனித்துறையில் ஆற்றல் அனுபவம் மிக்கவர்கள்.
- இங்குள்ள பயிற்றுவிப்பாளர்கள் நன்கு பயிற்றப்பட்டவர்கள்.
- அனுமதிக்கட்டணம் நீங்கலாக Course Feeஇல் 50% கட்டணச்சலுகை சொற்ப நாள்களுக்கு மட்டுமே.
- விரிவுரைகள் உங்கள் வசதிக்கேற்ப நடத்தப்படும்.
- கட்டணம் பகுதி பகுதியாகச் செலுத்த அனுமதிக்கப்படும்.
- மேலதிக விபரங்களுக்கு 021 – 4590291என்ற இலக்கத்துடன் அல்லது நேரில் தொடர்புகொள்ளவும்.


GSL
G.S
Linganathan & Co.,
திருமணப் பட்டுப்புடவைகள், பட்டுவேட்டிகள்,
பலரக சாறிகள், சேட், T சேட், ரவுசர்கள், பேபி கிட்,
சல்வார் சாறிகள் போன்றவற்றை மலிவு விலையில்
பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.
G.S
லிங்கநாதன்
& கோ
No - 13 - 14, Grand Bazaar,
Jaffna,
Sri Lanka.
T.P.: 021 222 3139


Thurkka Trades
துர்க்கா ரேடர்ஸ்
அனைத்து பலசரக்கு பொருட்களையும்
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.
150, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில்.
150, K.K.S Road,
KoKuvil.
T.P.: 021 222 5008
VH
VINAYAKAR HARDWARE
சீமெந்து, பெயின்ற் வகைகள் மற்றும்
கட்டட நிர்மாணப்பொருட்கள்
விற்பனையாளர்
விநாயகர்
ஹாட்வெயர்
கே.கே.எஸ். றோட்,
இணுவில்.
K.K.S. Road,
Inuvil.
சோதிலிங்கன் கூல்பார்
அனைத்து குளிர்பானவகைகள்,
சிற்றுண்டிகள் மதிய உணவு
போன்றவற்றைப்
பெற்றுக்கொள்ளலாம்.
கே.கே.எஸ். றோட்,
கோண்டாவில்.
T.P.: 0777 066895
ஷரன்சகி
எலக்ரோனிஸ்
Sale For T.V, V.C.R & DVD,
VCD Player, Audio, Video C.D'S
ரி.வி., றேடியோ, மற்றும் அனைத்து மின்
உபகரணங்களும் பழுதுபார்க்க புதிய பழைய
பாடல்களை சீ.டி.யிலும் ஒலிநாடாவிலும்
பதிவு செய்து கொள்ள! கணனி மூலம்
ஓ(f) வ்செற் Photoshop & Typing
வேலைகளும் செய்யப்படும்.
SARANSAKE
ELECTRONICS
369, K.K.S. ROAD,
JAFFNA.
T.P.: 0777 079462


ANDRA
DIGITAL IMAGE
ஓவ்செற் பிறிண்ட்
டிஜிற்றல் போர்ட்
டிஜிற்றல் பனர்கள்
8 அடி முதல் 400 அடி வரை
உப்புமடம் சந்தி,கே.கே.எஸ் றோட் , கோண்டாவில்.
T.P-021-4590268, 0776622981
Printed By: ANDRA DIGITAL IMAGE